ISSN 1391-9504

Vijey விஜய்

# விஜய்

12.01.2011 - மலர் 07, இதழ் 45



## நிலவைப் பற்றிய விசித்திரத் தகவல்கள்

## பயணம் செய்வோம் கவனம் கொள்வோம்

## குளிர்காலத்தில் நிகழும் மாற்றங்கள்

## 'சீபா' என்றால் என்ன?

விஜய்
Bata
B.first
SCHOOL SHOES
ரூ. 3 லட்சம் மதிப்புள்ள
பண வவுச்சர்களை வெல்வதற்கும்,
10% விலைக் கழிவைப் பெறவும்
ஓர் அரிய சந்தர்ப்பம்

விபரம் 9 ஆம் பக்கத்தில்...

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வர்த்தகத்தில் ஏகபோக உரிமை

இலங்கையில் வர்த்தகத்துறையில் வேறு இனத்தவர்கள் ஈடுபடுவதற்கு அனுமதி அளிப்பது ஓர் அறிவான செயல் அல்ல என ஒல்லாந்த ஆள்பதி தீர்மானித்தார். இதனைப் பத்தேவியாவுக்கும் அறிவித்தார். மறுபுறம் வர்த்தகத்தை முற்றாகத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க எண்ணினார். அத்தோடு, சுமுகமான முறையில் காணிகளில் இருந்து கிடைக்கும் வரிகளையும் அறவிட எண்ணினார். மன்னனோடு நட்புறவைப் பேணவும் தீர்மானித்தார். ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத்துடன் ஒற்றுமையைப் பேணுவது மன்னனுக்கும் நாட்டு மக்களுக்கும் பெரும் வரப்பிரசாதமாக அமையும் என்பதை மன்னனுக்கு அறிவுறுத்துவது மிக முக்கியமான விடயமென அவர் நினைத்தார்.

அதற்காக, ஆள்பதி சில முயற்சிகளை மேற்கொண்டார். மூடியிருந்த துறைமுகங்களை மீண்டும் திறக்க பத்தேவியாவின் அனுமதியை நாடினார். ஆனால், அவர்கள் அதற்கு இடமளிக்கவில்லை.

அதன்பின்னர் தமக்குப் பின் ஆள்பதியாக பதவி ஏற்பவர் மன்னனோடு நட்புறவாக இருக்கவும், மன்னனால் ஏற்படும் தவறுகளைக் கண்டும் காணாதது போல் இருப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். மன்னனிடம் எந்நேரமும் உதவிகளை கேட்கும் வர்த்தகசங்கத்தின் பணியாளர்களுக்கும் சில அறிவுரைகளையும் ஆள்பதி வழங்கினார். அறிவோடும், நீதி நேர்மையோடும் உண்மையாகவும் செயற்படும்படி எச்சரிக்கையுடன் கூறினார். எனினும், நாயக்கர்களைப் பற்றி அவருக்கு நல்லெண்ணம் இருக்கவில்லை. வர்த்தகத்தின் ஏகபோக உரிமைகளை வர்த்தகசங்கம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் அவர்களுக்குப் பெரும் இலாபம் கிடைக்கின்றது என்பதை நாயக்கர்கள் அறிந்துகொண்டனர். அத்தோடு, வர்த்தகத்தை, விருத்தி செய்யும் முறைகளையும் அவர்கள் நன்கு அறிந்துகொண்டனர். அதுவரை கண்டியில் குறிப்பிடக்கூடியளவு வரி அறவிடும் பலமும் அவர்களிடம் இருந்தது. அந்த வாய்ப்பை வர்த்தகசங்கத்திடம் வழங்கித் துறைமுகங்களைத் திறப்பதற்காக வேண்டியவற்றைச் செய்ய அவர்கள் ஆயத்தமாக இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் தரத்திற்கு மாணவர் அனுமதி ஜனவரி 18 ஆம் திகதியில்....

இந்த வருடத்தில் அரசாங்கப் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்ளும் நடவடிக்கைகள் இம்மாதம் 18 ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ளதாக அறியக்கிடைக்கின்றது.

இது குறித்து மேலதிக விடயங்கள் அடங்கிய சுற்றுநிருபமொன்று சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அத்தினத்தில் முதலாம் தரத்தில் அனுமதியைப் பெறும் மாணவர்களை வரவேற்கும் முகமாக பாடசாலைகளில் விசேட நிகழ்வுகளை அதிபர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இதேவேளை, ஒவ்வொரு பாடசாலையிலும் அனுமதியைப் பெறுகின்ற மாணவர்களின் இறுதிப் பெயர்ப்பட்டியல் தற்போதளவில் பாடசாலைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அனுமதியை அடுத்து, நிலவும் வெற்றிடங்களுக்கமைய மேலதிக மாணவர் அனுமதி வழங்கப்படும் என மேலும் அறியக்கிடைக்கின்றது.



# கரும்பலகைக்குப் பதிலாக பச்சைநிறப் பலகை

பாடசாலைகளில் மாணவர்களுக்கு கற்பிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற கரும்பலகைக்குப் பதிலாக பச்சை நிறத்தினாலான பலகையை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர்களுக்குக் கற்பிப்பதற்காக பாடசாலைகளில் இதுவரை கரும்பலகைகளே பயன்படுத்தப்பட்டு வந்தன.




எனினும், கரும்பலகையில் வெள்ளை நிறத்தில் எழுத்துக்கள் எழுதப்படும்போது, அதனை அவதானிக்கும் மாணவர்களின் கண்கள் பாதிப்படையும் அபாயம் நிலவுவதாக வைத்தியர்களால் கண்டறியப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, பாடசாலைகளில் பச்சைநிறப் பலகையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தற்போதளவில் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு 3,000 பச்சைநிறப் பலகைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பச்சைநிறப் பலகையில் வெள்ளை நிறத்தினால் எழுத்துக்கள் எழுதப்படும்போது, அதனால் மாணவர்களின் கண்களுக்கு எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படுவதில்லை என வைத்தியர்கள் உறுதிப்படுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பாலர் பாடசாலை சிறார்களுக்கு ஒருவேளை பால்



பாலர் பாடசாலை சிறார்களுக்கு இம்மாதம் முதல் ஒருவேளை அருந்துவதற்குப் பால் வழங்கப்பட உள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மகளிர் அலுவல்கள் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்;

பாலர் பாடசாலைகளில் கல்வி கற்கும் சிறார்களுக்கு 2011 ஜனவரி முதல் ஒருவேளை பால் வழங்கப்படும் எனவும், அந்தந்தப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு பிரதேச சபையூடாக கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விஜய்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

(கடந்த வாரத் தொடர்ச்சி.....)

**கெப்ஸ்களை (Caps) வெற்றியீட்டிய மிகுதி வெற்றியாளர்கள்:**



75. மகேந்திரன் விதுர்ஷன்,
41/12, சிசவீரசிங்க சதுர்க்கம், 3 ஆம் குறுக்கு, மட்டக்களப்பு.
76. டி.ஜெவ்ரி வொட்சன், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
77. எம்.எஃப்.எம்.அஸ்ரி, பூலாச்சேனை, நுரைச்சோலை.
78. எப்.ஷாதா இர்பான்,
06, சேர்கியூலர் வீதி, சீனங்கோட்டை, பேருவளை.
79. எம்.எஸ்.எம்.ஷிஹ்ரான், 04, புதுக்குடியிருப்பு, கல்பிட்டி.
80. ஆர்.ஷர்மிலன், தபில்லேகம, தும்மலதெனிய, வரகாபொல.
81. எம்.எஃப்.எம்.பாஸில், 25, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.
82. மோ.சுலக்ஷி, 475, பிரதான வீதி, மாத்தளை.
83. எம்.எப்.எப்.ருஸ்னா, 102, ஹபுகஸ்தென்னை, மடவளை பஸார்.
84. டி.கணேஷன், ரிக்காடன் கொலனி, மஸ்கெலியா.
85. சு.டினூஸ் ரேவிந்த், 01, லீலா ஸ்டோர்ஸ்,ஹீல்-ஓயா வீதி, பண்டாரவளை.
86. என்.எல்.எம்.ஹஸ்ஃபான்,
81/25"16, எச்.கே.எட்மன் மாவத்தை,மிலிதுவ, காலி.
87. எச்.எஸ்.எப்.ஹஸ்ஸானா, 130, நகரமண்டப வீதி, கல்முனைக்குடி-14.
88. சுந்தரராஜ் சதுர்ஷன், வேக்ஹவுஸ் வீதி, வந்தாறுமூலை, மட்டக்களப்பு.
89. தி.திலோசன், கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு.
90. பாத்திமா பஸீஹா, 140A, தெஹியங்க, முருதலாவ, கண்டி.
91. ஆர்.தர்ஷன், 72, பருசல்ல வீதி, எட்டியாந்தோட்டை.
92. எம்.ரி.பாத்திமா அஸ்ரா, 256/1, மாபேரிய, உக்குவளை.
93. எம்.எம்.முஹம்மட், 45/6, கல்பொக்க, வெலிகம.
94. எம்.என்.பி.நூர் சுஜா, பாடசாலை வீதி, மீராவோடை-04.
95. எம்.ஐ.ஹப்ஸா, 17/3, சினிமாகல வீதி, குருவிட.
96. எல்.நிருஷன், 21, கொக்குவில் மேற்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
97. எம்.ஆர்.ஸஹாரா, 240/E, நாம்புலுவ,பஸ்யால.
98. ஏ.எம்.பாத்திமா பஹ்மிதா, 22 ஹாஜியார் வீதி, சம்மாந்துறை-09.
99. அகல்யா சுரேஸ், 202, பிரின்ஸ் இல்லம், சின்னக்கடை, மன்னார்.
100. பி.ஜெயபிரஷாந், 34/2-1/1, கிருலப்பனை ஒழுங்கை, கொழும்பு-05



***(டீ மக்ஸ்களை (TEA MUGS) வெற்றியீட்டியோர் விபரம் அடுத்த வாரம் இடம்பெறும்)***

# 'நமது உலகம்' சஞ்சிகைக்கு ஆக்கங்கள்

**நமது உலகம் (அபே லோக்கய) எனும் சிறுவர்களுக்கான இலவச சஞ்சிகைக்கு ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**நமது உலகம் சஞ்சிகையின் 4 ஆம் இதழுக்கு ஆக்கங்களை எழுதி அனுப்புகின்ற மாணவர்கள் எந்தவொரு வயது வித்தியாசமுமின்றி கவிதை, கதை, கட்டுரை, சித்திரம், வர்ணனைகள் என எந்தவொரு தலைப்பிலும் ஆக்கங்களை அனுப்பலாம்.**

**தமது ஆக்கங்களுடன்,முழுப் பெயர்,வகுப்பு, வீட்டு முகவரி, பாடசாலை முகவரி, தொலைபேசி இலக்கம், மாவட்டம், மாகாணம் ஆகியவற்றையும் குறிப்பிட்டு பெப்ரவரி 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.**

**அனுப்ப**



**வேண்டிய முகவரி: 'நமது உலகம்', 62, புவக்அரம்ப வீதி, கடலான, மொரட்டுவை.**

60 DAYS BASIC / SPOKEN ENGLISH / தபால் மூல ஆங்கில பாடநெறி
5ம் ஆண்டு புலமை பரீட்சையை முடித்த மாணவர்களுக்கு என விசேடமாக தயாரிக்கப்பட்ட BASIC / SPOKEN ENGLISH தபால் மூல பாடநெறி
எமது இந்த BASIC / SPOKEN ENGLISH அடிப்படையும் பேச்சுப் பயிற்சி பாடநெறியானது 7 வயது தொடக்கம் 12 வயது வரையான சின்னம் சிறார்க்கு சிறந்த பாடநெறியாகும்
அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுதவாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.
இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
பாடநெறியை தொடரும் உங்களுக்கு
அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும்
30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்.
மேலதிக விபரங்களை பெற பெயர்,முகவரியை தெளிவாக 0777-220002 க்கு SmS செய்யுங்கள்
இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இருபது லட்சம் வருடங்களுக்கு முன்னைய காலப் பகுதியைச் சேர்ந்த மனிதனின் இரண்டு எலும்புத் தொகுதிகள் தென்னாபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தக் கண்டுபிடிப்புப் பற்றிய உண்மை நிலவரங்களை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இதன் ஊடாக, இப்பொழுது மனித பரிணாமத்தின் புதிய அத்தியாயம் ஒன்று எழுதப்பட்டுள்ளது**

# மனிதர்களின் புதிய உறவினர்கள்

2008 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவின் ஜொகன்னஸ்பேர்க் நகருக்கு அப்பால் 40 கி.மீ தூரத்தில் இருக்கும் மலைப்பிரதேசத்தின் கற்குகையொன்றை ஆய்வு செய்த படிம விஞ்ஞானிகள் குழு ஆதி மனிதர்கள் இருவரின் எலும்புத் தொகுதியின் பகுதிகளைக் கண்டுபிடித்துள்ளது. இவை வளர்ந்த ஒரு பெண்ணினதும் இளம் ஆண்பிள்ளையொன்றினதும் எலும்புகள் என்று கண்டறியப்பட்டுள்ளன.

2008 இல் இவை கண்டுபிடிக்கப்பட்டபோதிலும் இந்த மானிடர்கள் இருவரும் இதற்கு முன்னர் நாம் அறிந்திருந்த மானுடர்கள் அல்லர் என்பதும் அண்மையிலேயே கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆதி மானிடர்களுக்கு 'ஒஸ்ட்ரெலோபித்திக்கஸ் செடீபா' என்று பெயரிடப்பட்டுள்ளது.

''மானிட பரிணாமத்தில் புதிய அத்தியாயம் ஒன்றை இந்த மானிடர்கள் ஆரம்பித்து வைத்துள்ளனர்.






லீ பர்ஜர்

இது தொடர்பாக, வியப்பானதும் மிகவும் முழுமையானதுமான தகவல்கள் பலவற்றை நாம் இவர்களின் ஊடாக அறிந்துகொண்டுள்ளோம். ஆதி மானிடர்கள் காட்டுவாசிகளாக வாழ்ந்து அந்தக் காட்டு வாழ்க்கையில் இருந்து பரிணாமம் அடைந்து தரையில் கால் பதித்து இரு கால்களினால் நடந்து புதிய வாழ்க்கைக்குப் பழக்கப்படும் வரை நடந்த மாற்றங்களைப் பற்றி விளங்கிக்கொள்ள 'ஒஸ்ட்ரெலோபித்திகஸ் செடீபா' எமக்கு உதவும் என்று இது தொடர்பாக 'சயன்ஸ்' விஞ்ஞான இதழுக்கு கட்டுரை ஒன்றை எழுதியுள்ள விஞ்ஞானி லீ பர்ஜர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டுபிடிக்கப்பட்ட எலும்புப் பகுதிகளின் அடிப்படையில் நோக்கும்போது, இந்த மானிடர்கள் இருவரும் 1.27 மீற்றர் (4 அடி 2 அங்குலம்) உயரத்தைக் கொண்டுள்ளனர். பெண் 33 கிலோ (72.6 இறாத்தல்) நிறையைக் கொண்டுள்ளதுடன், 10 வயதுடைய இளம் ஆண்பிள்ளை 27 கிலோ நிறையைக்கொண்டுள்ளது. தலைக்கபாலத்தின் அளவின்படி, இந்த இருவரினதும் மூளைகள் சிறியனவாகும். இது அளவில் நவீன மனிதர்களின் மூளையில் 1/3 ஆகும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய 'ஒஸ்ட்ரொலோபித்திகஸ்' வகைகளை விட, இவை பரிணாம வளர்ச்சியில் முன்னணி வகிப்பதை அவதானிக்க முடிவதாக பர்ஜர் கூறுகின்றார். இவற்றின் உடல் அமைப்பு ஆதிகால முதல் பகுதி மானிடர்களுடன் ஒத்துப்போவதாக பர்ஜர் தெளிவுபடுத்துகின்றார்.






எவ்வாறாயினும், இவை மானிட பரிணாமத்தின் இழக்கப்பட்ட துளிர் என்று கூறப்பட்டாலும் 'ஒஸ்ட்ரெலோபித்திகஸ் செடீபா' சரியாக மானுட பரிணாமத்தில் எந்த இடத்தில் தொடர்புறுகின்றது என்பதனை இதுவரை உறுதியாகக் கூறமுடியாதுள்ளதாக பர்ஜர் குறிப்பிடுகின்றார்.

இரண்டு படிமங்களிலும் எலும்புகள் அமைந்துள்ள முறையானது ஆதி ஹோமோ சேப்பியன்களுடன் பெருமளவில் ஒன்றுபடுகின்றது. இந்தப் படிம எலும்புகள் கிடைத்துள்ளமையானது 'லூசி' எனும் படிமம் கிடைத்தபோது, ஏற்பட்டவாறு பெரும் மாற்றத்தினை ஏற்படுத்தும் என்றே கலாநிதி பர்ஜர் கருதுகின்றார். மானிடப் பரிணாமத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள உலகில் மிகவும் பிரசித்தி பெற்ற படிமம்தான் இந்த 'லூசி'. 1974 இல் கண்டுபிடிக்கப்பட்ட 'லூசி' 3.2 மில்லியன் வருடங்கள் பழைமையானது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். பல வருடங்களாக மானிடர்களின் பொது முன்னோராக லூசி விளங்கினாள். எனினும், 44 லட்சம் வருடங்கள் பழைமை வாய்ந்த 'ஆர்டி' கண்டுபிடிக்கப்பட்டதுடன் அந்தக் கருத்தில் மாற்றம் ஏற்பட்டது. 'ஆர்டி' தற்கால சிம்பன்சிகளின் முன்னோர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

'ஒஸ்ட்ரெலோபித்திகஸ் செடீபா' என்ற மானிடர்கள் இருவரின் படிமங்கள் மேலும் 25 விலங்குகளின் படிமங்களில் இருந்தே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புதைபொருள் ஆய்வாளர்களினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அந்த விலங்குகளில் ஹைனா, அன்டிலாப்மான் மற்றும் காட்டுக்குதிரை ஆகியவற்றின் எலும்புகளின் பகுதிகளும் உள்ளதாகத் தெரிய வருகின்றது.

## மனிதர்களுக்கு உறவினராக விளங்கும் பண்டைய மானிடர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



பு/சென்.மேரிஸ் த.ம. வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ஷியாமளா லோர்டஸ், 150 புள்ளி களைப் பெற்றுள்ளார். இவர், ஞானதாஸ்-சாந்தி நிரோஷினா தம்பதியரின் புதல்வியாவார்.



பளுவெவ மு.ம.வித் தியாலயத்தைச் சேர்ந்த எம். அஸ்ஹர், 155 புள்ளிகளைப் பெற்றுள் ளார். இவர், ஹமீது-றஜீனா உம்மா தம்பதிய ரின் புதல்வராவார்.



பளுவெவ மு.ம.வித்தி யாலயத்தைச் சேர்ந்த நஜுலாபானு, 147 புள்ளி களைப் பெற்றுள்ளார். இவர், சதக்லெப்பை-அஸீனா தம்பதியரின் புதல்வியாவார்.



நாவலப்பிட்டி சென். மேரிஸ் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் எம்.ஸாஃம், 166 புள்ளி களைப் பெற்றுள்ளார். இவர், ஸகரியா-ஸுல்ஃபியா தம்பதியரின் புதல்வராவார்.



கல்கமுவ மு.ம. வித்தி யாலயத்தில் கல்வி கற்கும் ர.தனுஸ்கர், 154 புள்ளிகளைப் பெற்றுள் ளார். இவர், ரவிந்திரன்-இந்திராணி தம்பதியரின் புதல்வராவார்.



கிரி/மதீனா தேசிய பாடசாலையில் கல்வி பயிலும் நஸ்பான் அகீட், 169 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



பு/செய்னப் மு.ம. ஆரம்பப் பாடசாலை யில் கல்வி கற்கும் மர்யம் ருக்ஷா, 170 புள்ளிகளைப் பெற்றுள் ளார். இவர், ஷமீர்-நுஸ்ரா தம்பதியரின் புதல்வியாவார்.



எஃப். ரஹ்ஷா, 147 புள்ளிகளைப் பெற்றுள் ளார். மினு/அல்-ஹசன் வித்தியாலய மாணவி யான இவர், ரஸ்மில்-பர்ஹானா தம்பதியரின் புதல்வியாவார்.



எஃப்.நுஹா, 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கொடவெல முஸ்லிம் வித்தியாலய மாணவியாவார்.



ரவிச்சந்திரநாதன் அச்சுதன், 161 புள்ளி களைப் பெற்றுள்ளார். இவர், முல்/சிறி சுப்பிரமணிய வித்தியா லயத்தில் கல்வி கற்கின் றார்.



கிண்ணியா மு.ம.ம.வித்தியாலய மாணவி பாத்திமா அம்னா, 144 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நிஜாம்தீன்-ஜரீனா தம்பதியரின் புதல்வியாவார்.



ஹம்தா பானு, 143 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கிண்ணியா மு.ம.ம.வித்தியாலய மாணவியான இவர், முஹம்மது அலி-மஸாஜிதா தம்பதியரின் புதல்வியாவார்.



கிண்ணியா மு.ம.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பாத்திமா ரக்ஸானா, 143 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ரஸீன்-ஜெஸீமா தம்பதியரின் புதல்வியாவார்.



தலவாக்கலை த.ம.வித்தியாலய மாணவி ஆர்.ஸ்ரீதனுக்ஷி, 145 புள்ளிகளைப் பெற்றுள் ளார்.



எஸ்.சோபனா, 143 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர்,தலவாக்கலை த.ம.வித்தியாலய மாணவியாவார்.



தலவாக்கலை த.ம.வித்தியாலய மாணவி எம்.ஹஷானி, 140 புள்ளிகளைப் பெற்றுள் ளார்.



*பொத்துவில் ம.கல்லூரியிலிருந்து சித்திய டைந்த (இ.வ) ஆர். அஸ்ரபா (147 புள்ளிகள்), வை.பயாஸா (159 புள்ளிகள்), ஏ.சிப்னா (158 புள்ளிகள்), ஷிபாக் ஹஸ்னி (151 புள்ளிகள்), ஏ.அப்துல்லாஹ் (148 புள்ளிகள்), நுஸ்கி அஹமட் (161 புள்ளிகள்) ஆகிய மாணவர்கள் (இ.வ) தமது பகுதித் தலைவர் எம்.இப்றாஹிம், ஆசிரியர் எல்.பதியுத்தீன், அதிபர் எம்.பாறுக், பிரதி அதிபர் எம்.சித்தீக், வலயத் தலைவர் எம்.ஜவாஹிர் ஆகியோருடன் காணப்படு கின்றனர்.*

# கல்வி கற்பதற்கான ஆலோசனை



கல்வியின் செயல்முறையானது நாடு, சமுதா யம், ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகியவற் றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இதன் மூலமே மனிதனின் ஆளுமைகளும் திறமைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. கல்வியானது சமூகத்தை யும் பண்பாட்டையும் இணைக்கும் ஒரு பாலமாக அமைகின்றது.

மேலும், கல்வி சார்ந்த ஆலோசனையானது மாணவர்களுக்கு பாடசாலைகளிலும் பல்கலைக்கழ கங்களிலும் அளிக்கப்படும் ஓர் உதவியாகும்.






இந்த ஆலோசனை பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்போது, அது மனிதனுக்கு முக்கியம் வாய்ந்த ஒன்றாகவும் தத்துவநெறியில் மாண வர்களுக்குத் தோன் றும் அனுபவங் களுடனும் தொடர்பு கொண்டுள்ளது என்பது புலனாகின் றது. கல்வி சார்ந்த ஆலோசனை முறை களை மூன்றாக வகைப் படுத்தலாம். அவையாவன;

1. ஆரம்பப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கான ஆலோசனை.
2. மேல்நிலைப் பள்ளியில் பயில்பவர்களுக்கான ஆலோசனை.
3. கல்லூரிகளில் ஆலோசனை என்பனவாகும்.

அத்துடன், கல்வி சார்ந்த ஆலோசனை முறை களை பின்வரும் மூன்று நிலைகளில் பின்பற்றலாம்.

1. கற்பவரின் பலம், பலவீனம் என்பனவற்றை மதிப்பிட்டு, அதன் மூலம் தமது குறிக்கோளை தேர்ந்தெடுக்கும் முறையை மாணவர்களுக்கு விளக்குதல்.
2. படிக்கும் திறனையும் பிரச்சினைகளையும் அறிந்து, தேவையான வழிமுறைகளை வழங்குதல்.
3. வாழ்க்கைப் பிரச்சினைகளையும் சொந்தப் பிரச்சினைகளையும் அறிந்து, அதிலிருந்து மீளச் செய்து நல்ல மனிதனாக மாற்றுதல்.

## கல்வி முகாமைத்துவம் - 37

## கற்றலுக்கான ஆலோசனைகள்

### பாடசாலை ஆலோசகர்கள்

பாடசாலையில் உள்ள ஆலோசகர்கள் இரண்டு முக்கிய பொறுப்புகளை வகிக்கின் றனர். அவையாவன;

1. ஆலோசனை வழங்குதல்
2. கலந்துரையாடல் அல்லது கலந்தா லோசித்தல் போன்றவையாகும்.

பாடசாலை ஆலோசகர் என்பவர் அப் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், நிர்வாக அதிகாரிகள் என்பவர்களுடன் கலந்துபேசிப் பணிபுரிதல் வேண்டும்.





### மாணவர் ஆலோசனைகள்

''மாணவர் ஒருவர் தனக்குத் தானே உதவிக் கொள்ளவே மாணவ ஆலோசனைகள் உதவுகின் றன'' என Dunsmoor, Miller ஆகியோர் கூறுகின்றனர்.

அவர்களது பார்வையில் மாணவ ஆலோசனை யானது பின்வரும் நோக்கங்களைக் கொண்டது.

1. சித்தி, வெற்றி அடைவதற்கான முக்கிய தகவல்களை வழங்கல்.
2. மாணவனது பிரச்சினையைத் தீர்க்க உதவக் கூடிய மாணவர் சம்பந்தமான தகவல்களைப் பெறுதல்.
3. மாணவருக்கும் ஆசிரியருக்குமிடையில் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தல்.
4. மாணவரொருவர் தனது கஷ்டங்களிலிருந்து விடுபட அவனே ஒரு திட்டத்தை வகுக்க உதவுதல்.
5. மாணவர் தனது விருப்பு, திறமைகள், உளச் சார்பு, சந்தர்ப்பங்கள் என்ப னவற்றை விளக்கமாக அறிய உதவுதல்.
6. சரியான மனப்பாங்கினை யும் சிறப்புத் திறமைகளையும் விருத்தி செய்ய உற்சாகமூட்டல்.
7. சாதிப்பதற்கான, சாதகமான முயற்சி களை உள்ளூட்டல்.
8. கல்விசார், தொழில்சார் தேர்வுகளுக்குத் திட்டமிடும்போது, மாணவருக்கு உதவி யாக இருத்தல்.

(தொடரும்)

**எம்.ஏ.எஃப் சப்ரானா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணம் செய்கையில் கவனத்தி

நாம் செய்யும் எந்தச் செயலையும் உரிய நேரத்தில், உரியவாறு, மற்றவர்களுக்கு இடையூறு ஏதுமின்றிச் செய்ய முடியுமாயின் சட்ட திட்டங்களும், ஒழுக்கக் கோவைகளும் அவசியம் இல்லாமலேயே போய்விடும். சட்டம், ஒழுக்கம் கொண்டுள்ள சமூகத்திற்கு இவை பற்றி நினைவூட்டுவதிலும் தவறு ஏதுமில்லை. சட்டத்தை மீறுபவர்கள் சட்டத்தினால் தண்டிக்கப்படுகிறார்கள். எனினும் ஒழுக்கத்தை மீறுபவர்களை அவ்வாறு தண்டிக்க முடியாது. இதனால், ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க சமூகத்தில் அனைவரினதும் பங்களிப்பு அவசியமாகும். வயது வந்தோர் என்ற நிலையை அடையும் இளம் பருவத்தினருக்கு சமூகத்தின் ஒழுக்க நிலைகள் தொடர்பிலான புரிந்துணர்வின்மை காரணமாகவும் ஒழுக்கங்கள் மீறப்படுகின்றன. எனினும் நாம் உண்ணும், அருந்தும், அணியும், பயணம் செய்யும் அனைத்து செயற்பாடுகளுக்கும் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுக்கமுறைகள் உள்ளன. இவற்றில் போக்குவரத்துகள் தொடர்பான ஒழுக்க நெறிமுறைகள் பற்றிப் பார்ப்போம்.



வலதுபுறம் பார்த்து இடதுபுறம் பாருங்கள். திரும்பவும் வலதுபுறம் பாருங்கள். பாதையில் வாகனம் இல்லையெனில் சீக்கிரமாகக் கடக்கவும்.



பண்டைய கால மனிதர்களின் தேவைகள் மிகவும் குறைவாக இருந்தமையினால் அவர்களின் போக்குவரத்து செயற்பாடுகளும் குறைந்தளவிலேயே இருந்தன. ஆனால் இன்றைய நவீனயுகத்தில் போக்குவரத்து என்பது இன்றியமையாத செயற்பாடாகி விட்டது. இதனால், பலதரப்பட்ட போக்குவரத்து செயற்பாடுகளில் ஏற்படும் அசௌகரியங்களைக் குறைத்துக் கொள்ளவென ஒழுக்க நெறியொன்று உருவாக்கப்பட்டது.

## நவீன காலத்தில் சாதாரண மக்கள் மத்தியில் பிரபலமாக உள்ள போக்குவரத்து முறைகள்

**பொதுப் போக்குவரத்து சேவைகள்:** புகையிரதம்,பொதுமக்கள் பஸ் போக்குவரத்து சேவைகள், பாடசாலை பஸ்கள்.

**தனியார் போக்குவரத்து முறைகள்:** சைக்கிள், மோட்டார் சைக்கிள், லொறி ஆகிய தனியார் வாகனங்கள்.

**நடைப் போக்குவரத்து முறைகள்:** பிரதான தெருக்களில் மற்றும் குறுக்குத் தெருக்களில் நடந்து செல்லும் பாதசாரிகள் இதில் அடங்குவர்.

**போக்குவரத்துக்கான ஒழுக்கநெறிக் கோவையொன்று:** போக்குவரத்தின்போது,பின்பற்றப்படவேண்டிய ஒழுக்க நெறிக்கோவையொன்று உள்ளது. மக்கள் மத்தியில் சுய ஒழுக்கத்தை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். போக்குவரத்தில் ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ள சுய ஒழுக்கம் மிகவும் அவசியமானது. இந்த ஒழுக்கநெறி இன்று நேற்றுத் தயாரிக்கப்பட்ட ஒன்றல்ல. பண்டைய காலம் தொட்டு போக்குவரத்துத் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஒழுக்கநெறி தயாரிக்கப்பட்டுப் பின்பற்றப்பட்டு வரப்பட்டது. இந்த ஒழுக்க நெறி இன்று மிகவும் சிக்கலான நிலையை எய்தியுள்ளது. அன்று ஒரே தடவையில் பல பயணிகள் முதன் முறையாக குதிரை வண்டியில் பயணம் செய்தனர். காலை 5 மணிக்குப் புறப்பட வேண்டிய வண்டி அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் மிகவும் தாமதமாகப் பயணத்தை ஆரம்பித்தது. இதனால் அன்று பயணிகள் அதிகாரிகளைத் துயில் எழுப்பினர். அதேபோன்று,பயணிகள் வண்டியில் ஏறும்நிலையம், இறங்கும் நிலையம் என்பவற்றில் வெளியிடப்படும் சமிக்ஞைகள் முன்னேற்றகரமானவையாக இருக்கவில்லை. இந்த அசௌகரியங்களுக்கு மத்தியில் போக்குவரத்து மேலும் பின்னடைவை எதிர்நோக்கியது. இதனால் குதிரை வண்டி புறப்படும் நேரத்தையும், தரிப்பிடத்தை அடையும் நேரத்தையும் அறிவிக்கப் பீரங்கி வெடிச்சத்தம் ஒலிக்கப்பட்டது.

அன்றுபோல் இன்றும் பயணிகளின் அசமந்தப் போக்கு மற்றும் ஊழியர்களின் அசமந்தம் காரணமாக, போக்குவரத்தில் பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. இந்த அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ள போக்குவரத்து அதிகாரசபை, போக்குவரத்து ஆணைக்குழு என்பன ஒன்றிணைந்து பொதுப் பயணிகள் போக்குவரத்து சேவைக்கென ஒழுக்கநெறியைத் தயாரித்துள்ளது. இந்த ஒழுக்கநெறி மற்றும் சட்டம் மீறப்படும் சந்தர்ப்பங்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவென பொலிசார் உட்பட, பாதுகாப்புக் குழுக்களின் உதவிகள் பெறப்படுகின்றன.



## போக்குவரத்து ஒழுக்கநெறி மீறப்படுவதனால் நாளாந்த வாழ்வில் ஏற்படும் தாக்கங்கள்

இன்று நிகழும் வீதி விபத்துக்களில் 80 சதவீதமானவை போக்குவரத்து ஒழுக்கநெறி மற்றும் சட்டங்கள் மீறப்படுவதனாலேயே நிகழ்கின்றன. பயணிகள் மட்டுமன்றி சாரதிகள், நடத்துனர்கள், தமது ஒழுக்க நெறி மற்றும் சட்டம் தொடர்பில் காட்டும் அலட்சியம் காரணமாகவே, இவ்வாறான விபத்துகள் நிகழ்கின்றன.

வீதி விபத்து ஒன்று நிகழ்வதனால் எமது நாளாந்த செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. அதேபோல் உயிரிழப்புகள், சொத்து இழப்புகள் மற்றும் அங்கவீனங்கள் நிர்வாகச் செயற்பாடுகளிலும் மற்றும் போக்குவரத்துப் பிரச்சினைகள் வீதி விபத்துகள் என்பன நேரடியாகவும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக, ஒரு பாடசாலையில் ஆசிரியர் மாணவர்களிடம் ஏன் தாமதமாகப் பாடசாலைக்கு வந்தீர்கள்?என்று வினவினார். அவர்கள் அதற்கு அன்று போக்[illegible]த்தில் ஏற்பட்ட இடையூறுகளைத் தெளிவுபடுத்[illegible]ர்.

அன்றைய தினம் ஏனைய நாளை விட, பாடசாலை பஸ் தாமதமாக வந்ததாக ஒரு மாணவி தெரிவித்தார். சில மாணவர்கள் உரிய நேரத்தில் தரிப்பிடத்தில் இருக்காமையினால் அந்த மாணவி பயணித்த பாடசாலை பஸ் சாரதி அந்த மாணவி வரும் வரை பஸ்ஸை நிறுத்தி வைத்துள்ளார். இதனால் பஸ் பாடசாலைக்கு வரும்போது தாமதமடைந்துள்ளது. இதன்படி, அந்த மாணவி பாடசாலைக்குத் தாமதமாக வந்ததற்கு அந்த மாணவர்களின் அலட்சியமே காரணமாக இருந்துள்ளது.

மற்றுமொரு மாணவரின் தாமதத்திற்குக் காரணம் கவலை தரும் ஒரு செய்தியாகும்.அந்த மாணவர்கள் வந்த ரயிலில் பயணித்த ஒருவர் தவறிக் கீழே விழுந்தமையினால் மரணம் சம்பவித்துள்ளது. இதனால்,ரயில் இடையில் நிறுத்தப்பட்டு தாமதமடைந்துள்ளது.



அமைதியைக் குலைக்காமல் பயணியுங்கள்

இன்னொரு மாணவியின் வீடு பாடசாலைக்கு அண்மையிலேயே அமைந்துள்ளது. இதனால் அந்த மாணவி நடந்தே பாடசாலைக்கு வருவது வழக்கம், அன்று மழை நாள் என்பதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ல் கொள்ள வேண்டியவை



வீதியில் ஆங்காங்கே நீர் நிறைந்திருந்துள்ளது. அப்பாதையில் வந்த பஸ் சாரதியின் கவனயீனத்தால் பாதசாரிகள் சேற்று நீரால் நனைக்கப்பட்டுள்ளனர். இதனால் அந்த மாணவி வீட்டுக்குச் சென்று உடையை மாற்றிவரத் தாமதமாகிவிட்டது.

இவ்வாறு தாமதமாக வந்த அனைத்து மாணவர்களும் ஏதோவொரு போக்குவரத்துப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர். ஆனால், மற்றுமொரு மாணவன் சரியான



நேரத்தில் பாடசாலைக்கு வருகை தந்தபோதிலும் நண்பர்களுடன் கலகலப்பாக இருக்கவில்லை. நண்பர்கள் இது குறித்து வினவியபொழுது; அந்த மாணவன் அழுதேவிட்டான். அவன் புத்தகம் ஒன்றை வாங்க வைத்திருந்த பணம் பஸ்ஸில் காணாமல்போய்விட்டது. இதுபற்றி அறிந்த நடத்துநர் பயணிகளிடம் பஸ்ஸுக்குள் ஏதும் பொருட்கள் இருந்தால் அல்லது எவராவது எதையாவது திருடுவதைக் கண்டால் அது பற்றித் தமக்கு அறிவிக்குமாறும் அவரவர் பொருட்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளுமாறும் ஆலோசனை கூறியுள்ளார். மாணவனின் இந்த நிலையை அறிந்துகொண்ட ஆசிரியர் பஸ்களில் ஒட்டப்பட்டுள்ள அறிவிப்புகள் குறித்து உரிய அக்கறை செலுத்தியிருந்தால் இவ்வாறான இழப்புக்கள் ஏற்பட்டிருக்காது என்று குறிப்பிட்டார்.

## அறிவிப்புப் பலகைகளில் சுட்டிக்காட்டப்படும் ஒழுக்கநெறிகள்

பயணிகள் போக்குவரத்து சாதனங்களில் போக்குவரத்துத் தொடர்பான ஒழுக்கநெறிகள் 'ஸ்டிக்கர்'வடிவில் காட்சிக்கு ஒட்டப்பட்டிருப்பதைக் காணலாம். நீங்கள் ஒரு நிமிடம் பஸ்களில் ஒட்டப்பட்டிருக்கும் ஸ்டிக்கர்களைப் பாருங்கள். அதில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கும். அதில் 'மதகுருமார்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது' என்று குறிப்பிடப்பட்டிருக்கும்.

இரண்டாவது வரிசை ஆசனத்தில் 'கர்ப்பிணித் தாய்மார்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது' என்று குறிப்பிடப்பட்டிருக்கும். அதேபோன்று 'அங்கவீனர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது, என்றும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

இந்தவாறு குறிப்பிடப்பட்டுள்ள ஆசனங்கள் வெறுமையாக இருப்பின் அவற்றில் அமர்ந்துகொள்ளலாம்.

எனினும், இவ் ஆசனத்திற்குரியவர்கள் பஸ்ஸில் ஏறியவுடன் அவர்களுக்கான ஆசனங்களை வழங்க வேண்டியது அவசியமாகும்.

பஸ்ஸின் ஏனைய பகுதிகளிலும் எமது வாழ்க்கைக்கு அவசியமான ஒழுக்கநெறி குறிப்புக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. நாம் இவ்வாறான அறிவிப்புகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக: புகைப்பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. உங்கள் பணத்தைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். ஆசனங்களைக் கிழித்தல் கூடாது. 'இது பொதுச் சொத்தாகும். இதனைப் பாதுகாத்தல் உங்கள் கடமை'. அவசியமின்றி மணியை ஒலிக்கச் செய்வதனால் நமது பயணம் தாமதமடையும்.

உங்கள் பயணத்திற்குரிய பயணச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளுங்கள். பயண முடிவு வரை பயணச் சீட்டினை வைத்திருங்கள்.

இவ்வாறு பல அறிவுரைகள் பொதுப் பயணப் போக்குவரத்து சாதனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாறான அறிவுரைகளைப் பின்பற்றுவது நமது கடமையாகும்.

## பாதசாரிகளினால் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்கநெறிகள்

வலதுபுறம் பார்த்துப் பின் இடதுபுறம் பார்க்கவும். மீண்டும் வலதுபுறம் பாருங்கள். வீதியில் வாகனங்கள் இல்லாவிடின் விரைவாக வீதியைக் கடந்து விடுங்கள், என்ற அறிவிப்பை பாதசாரிகள் அடிக்கடி கடைப்பிடிக்க வேண்டும். வீதியைக் கடக்க முற்படும் போதே பெரும்பாலான விபத்துக்கள் நேர்கின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பாதசாரிகள் அவதானத்துடன் செயற்படுவதனால் விபத்துக்களைத் தவிர்த்துக் கொளள முடியும். பாதசாரிகள் வீதிகளைக் கடக்கும்போதும் வீதியில் பயணிக்கும் போதும் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்கநெறிகள் உள்ளன.

✱ எப்பொழுதும் பாதசாரிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் பயணம் செய்யுங்கள்.

✱ சந்திகளிலும் மக்கள் நெரிசல் மிக்க இடங்களிலும் வீதிகளைக் கடக்க முற்படும் போதும் வீதிச் சமிக்ஞைகள் மற்றும் பொலிஸாரின் ஆணையைப் பின்பற்றுங்கள்.

✱ அணி அணியாக வீதிகளில் பயணம் செய்யாதீர்கள்.

✱ வீதிகளில் பயணிக்கும்போது, வேடிக்கை மற்றும் விநோதமான விளையாட்டுகளில் ஈடுபடாதீர்கள்.

✱ வேறு விடயங்களில் கவனம் செலுத்தியபடியே வீதிகளில் பயணம் செய்யாதீர்கள்.

கைத் தொலைபேசிகளில் உரையாடியபடியே வீதிகளில் நடமாடுவதனைத் தவிருங்கள். எவ்வாறான நிலைமையில் வீதிகளில் பயணிக்கின்றோம் என்பதனை நினைவில் கொள்ளுங்கள். அதேபோன்று ஊர் பராக்கு பார்த்தபடியே பயணிப்பதும் பாதிப்பை ஏற்படுத்தும்.

✱வீதிகளைக் கடக்கும்போது, மஞ்சள் கோடு அல்லது பாலங்களைப் பயன்படுத்துங்கள்.

## பஸ்களில் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்கநெறிகள்

பஸ்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஒழுக்க நெறிகளைப் பாருங்கள். தவிர பஸ்களில் ஏறும்போதும் இறங்கும்போதும் மற்றும் செலுத்தும் போதும் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்க நெறிகள் உள்ளன. இவை பயணிகளுக்கும், போக்குவரத்து சேவை ஊழியர்களுக்கும் பொதுவானவை.

✱ பஸ்ஸில் ஏறுவதற்கு எப்பொழுதும் பஸ் தரிப்பிடத்தையே பயன்படுத்துங்கள்.

✱ பஸ் நிறுத்தப்படும் இடத்தில் பஸ்ஸை நிறுத்த முற்படுங்கள்.

✱ பஸ் நிறுத்தப்பட்ட பின் பஸ்ஸினுள் ஏறுங்கள்.

✱ வெற்று ஆசனங்கள் இல்லாவிடின் வரிசையாக நில்லுங்கள்.

✱ எப்பொழுதும் பிறருக்கு இடையூறின்றி இருங்கள்.

✱ பணத்தைச் செலுத்தி பயணச் சீட்டைப் பெற்றுக் கொண்ட பின்னர் பயண முடிவு வரை அதனை வைத்திருங்கள்.

✱ பஸ்ஸிலிருந்து இறங்குவதற்கு முன்னர் நிறுத்தல் மணியை ஒலிக்கச் செய்யுங்கள்.

✱ பஸ் நிறுத்தப்பட்டதும் அமைதியாக, ஒழுங்காக பஸ்ஸை விட்டு இறங்குங்கள்.

✱ பஸ்ஸை செலுத்தும் போது, சாரதி ஏனையவர்களுடன் உரையாட முற்படக் கூடாது. தொலைபேசி உரையாடல்களை முற்றாக நிறுத்துங்கள்.

✱ இதேபோல் புகைத்தல், உணவு உட்கொள்ளுதல், மதுபானம் அருந்துதல் கூடாது.

✱ உடல் பலவீனமான நிலையில் சாரதி பஸ்ஸை செலுத்தக் கூடாது.

உதா:- ஏதாவது நோய் நிலை அல்லது தூக்கக் கலக்கம்.

✱ பஸ்ஸில் வானொலி ஒலிக்கின்றதாயின் அது ஏனையவர்களுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் இருக்க வேண்டும்.

✱.பஸ்ஸில் கடுமையான சொற்களில் உரையாடுதல், சண்டைப் போடுதல் கூடாது.

✱ பயணிகளுடன் சிறந்த முறையில் உரையாடுதல் வேண்டும்.

✱ பயணிகள் ஏறவும் இறங்கவும் உரிய அவகாசமளித்தல் வேண்டும்.

## புகையிரத ஒழுக்கநெறிகள்

புகையிரதத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவிப்புகளில் உள்ளடங்கியுள்ள ஒழுக்க நெறிகளைப் பாதுகாப்பதுடன், பயணிகள் மற்றும் ஊழியர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகளும் உள்ளன.


✱ புகையிரதம் தரிப்பு மேடைக்குப் பிரவேசிப்பதற்கு முன்னர் பயணச் சீட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

✱ புகையிரதம் வரும் வரை தரிப்பிடத்தில் காத்திருங்கள்.

புகையிரதம் நிறுத்தப்பட்ட பின்னர் இறங்கும் பயணிகளுக்கு இடமளித்துவிட்டுப் பின்னர் புகையிரதத்திற்குள் ஏறுங்கள்.

✱ ஆபத்தான செயல்களில் ஈடுபடாதீர்கள். உதா:- புகையிரதம் அருகில் வரும்போது புகையிரதக் கடவையைக் கடத்தல், புகையிரத மிதிபடிகளில் நிற்றல், புகையிரதத்தின் மேல் இருந்து பயணித்தல் போன்றன.

✱ புகையிரதத்தில் அபாய மணியை ஒலிக்கச் செய்வதனை அவசர நேரத்தில் மட்டும் மேற்கொள்ளல்.



இது பொதுச் சொத்து



நீங்கள் சாரதியானால், கவனியுங்கள்



மிதிபலகையில் (புட்போர்ட்) பயணம் செய்வது அபாயகரமானது



பயணத்தின்போது சப்தமிடுவதைத் தவிருங்கள்

ஏறுமுன் சிந்தித்துப் பாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசு:-** ஒரு சட்ட சபைகொண்ட பல கட்சிக்குடியரசு.

**சுதந்திரம்:-** பிரான்சிடமிருந்து, பிரெஞ்ச் சூடான் உடன் மாலி சுயாட்சி அமைப்பு-4 ஏப்ரல் 1960; மாலி சுயாட்சி அமைப்பிடமிருந்து 20 ஓகஸ்ட் 1960.

**தேசிய பெயர்:-** ரிபப்ளிக் டு செனகல் (Republic of Senegal)

**ஜனாதிபதி:-** அப்துலாயி வாடே.

**பிரதமர்:-** சுலைமான் தீனி டியாயே.

## புவியியல்

மேற்கு ஆபிரிக்க நாடாகிய செனகல், அட்லாண்டிக் சமுத்திரத்தில் கடற்கரையைக் கொண்டுள்ளது. இதன் வடக்கு-மொரிடானியா; கிழக்கு-மாலி; தெற்கு-கினியா மற்றும் கினியா-பிசோ ஆகிய நாடுகள் எல்லைகளாக அமைந்துள்ளன. செனகல் பெரும்பாலும் தாழ்நிலத்தையும் அரைகுறை பாலைநிலத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. தென்மேற்கே அடர்ந்த காடுகள் காணப்படுகின்றன. செனகல், கஸாமன்சி என்பன இங்கு பாயும் முக்கிய ஆறுகளாகும்.

**மொத்தப்பரப்பு:-** 75,749 ச.மைல் (196,190 ச.கி மீ).

**மொத்த நிலப்பரப்பு:-** 74,131 ச.மைல் (191,999 ச.கி.மீ.).

**நிலப்பிரிவுகள்:-** 10 பிராந்தியங்கள்.

**தலைநகரமும் பெரிய நகரமும்:-** டகார்.

**சனத்தொகை** (2010):- 14,086,103.

**தேசிய கீதம்**

Pincez tous vos koras, frappez les balafons.
Le lion rouge a rugi.
Le dompteur de la brousse
D'un bond s'est élancé, என ஆரம்பமாகின்றது.

**நாணயம்:-** CFA ஃப்ரேங்க்.

**மொழிகள்:-** பிரெஞ்ச் (உத்தியோகபூர்வமொழி), வொலோப், புலார், ஜோலா, மண்டிங்கோ.


ஜனாதிபதி


பிரதமர்

**இனக்குழுக்கள்:-** ஏவாலோப் 43.3%, ஃபுலானி 23.8%, செரெர் 14.7%, டையோலா 3.7%, மண்டிங்கோ 3%, சொனிக்கே 1.1%, ஐரோப்பியரும் லெபனானியர்களும் 1%, ஏனையோர் 9.4%.

**சமயங்கள்:-** இஸ்லாம் 94%, கிறிஸ்தவம் 5% (பெரும்பாலும் ரோமன் கத்தோலிக்கம்), உள்ளூர் மதநம்பிக்கை 1%.

**எழுத்தறிவு** (2003):- 40%.

**இணையத்தளம்:-** sn

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:-** 221

## வரலாறு

செனகலில் நெடுங்காலத்திற்கு முன்பே குடியேற்றங்கள் உருவாகின. 11 ஆம் நூற்றாண்டில் இந்நாட்டின் பெரும்பான்மையான மக்கள் இஸ்லாமிய மதத்தைத் தழுவினர். 15 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் சில கரையோரப் பகுதிகளையும் செனகல் ஆற்றங்கரைப் பகுதிகளையும் ஆக்கிரமித்து நிலைகொண்டனர். 1959 இல் சென் லூயிஸ் எனும் இடத்தில் முதலாவது பிரெஞ்ச் குடியேற்றம் ஆரம்பமாகியது. இந்த நாட்டுக்குச் சொந்தமான கோரீ தீவானது, பிற்காலத்தில் முக்கியமான அடிமை வியாபார மையமாக மாறியது.

1895 இல் பிரான்ஸ் மேற்காபிரிக்காவுடன் செனகலை இணைத்துக்கொண்டது. 1946 செனகல் கடல் கடந்த பிரான்சிய குடியேற்றமாக மாறியது. 1960 ஜூன் மாதம் 20 ஆம் திகதி செனகல் மாலியுடன் இணைந்து சுதந்திரத்திற்கான முதல் அத்திவாரத்தை இட்டது. 1960 இல் பிரிந்து தனி நாடாகியது.

## காலநிலை

வெப்பவலயத்திற்கு உட்பட்ட ஒரு நாடாகும். இங்கு வெப்பமும் ஈரளிப்பும் கலந்த காலநிலை நிலவுகின்றது. செப்டெம்பர் முதல் மே வரையிலான காலப்பகுதி உலர்ந்த சுவாத்தியத்தைக் கொண்டது. ஜூன், ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்கள் மழைப்பருவமாகும். நாட்டின் தென்பகுதியிலேயே கடும் மழை பொழியும்.




# செனகல்

## கலாசாரம்

இங்கு ஆபிரிக்க கறுப்பின மக்களின் கலாசாரத்தோடு, பிரெஞ்ச் கலாசாரமும் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. அத்தோடு, வொலோப் கலாசாரம் தனித்துவம் பெற்றதாக விளங்குகின்றது. நாட்டின் கலாசாரத்தில் மதம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. 'சபார்' எனும் இசை நடனம் செனகல் நாட்டின் முக்கிய கலாசாரப் பிரதிபலிப்பாகும். அரிசி, வாசனைத் திரவியங்கள் மற்றும் மரக்கறி வகைகளைப் பயன்படுத்தி சமைக்கும் சோறு அடிப்படை உணவாக திகழ்கின்றது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்:-** பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் 282,600; செல்லிடத் தொலைபேசிகள், 2,983 மில்லியன். **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (2001):- AM 8, FM 20, SW1. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1997):-1. **இணையத்தள வழங்குனர்கள்** (2007):- 199; இணையத்தளப் பாவனையாளர்கள்:- 650,000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2002):- மொத்தம் 906 மீற்றர். **பெருந்தெருக்கள்** (2003):- மொத்தம் 13,576.கி.மீ. (இதில் செப்பனிடப்பட்டவை 3,972 கி.மீற்றர்; செப்பனிடப்படாதவை 9,604 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து:** 897 கி.மீ. **துறையும் துறைமுகமும்:-**
டகார்,
கௌலெக்,
மட்டம்,
போடோர்,
ரிச்சட் டோல்,
சென் லூயிஸ்,
ஸிகுயின்கோர்.



**விமான நிலையங்கள்** (2007): 20.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 13%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** தானியங்கள், பருத்தி, மரக்கறிகள், மாட்டுப் பண்ணைப் பொருட்கள், கோழிப் பண்ணை விளைபொருட்கள், பன்றிகள், மீன்கள். **தொழிலாளர் தொகை** (2005):- 4.82 மில்லியன் (விவசாயம் 77%, கைத்தொழில் மற்றும் சேவைகள் 23%). **பிரதான கைத்தொழில்கள்:** விவசாயம் மற்றும் மீன் உற்பத்திகள், பொஸ்பேற் கனிமங்கள், பெற்றோலிய சுத்திகரிப்பு, கப்பல் கட்டுதல் மற்றும் கப்பல் பழுதுபார்ப்பு. **இயற்கை வளங்கள்:-** மீன், பொஸ்பேற், இரும்புருக்கு, **ஏற்றுமதிகள்** (2009):- மீன், நிலக்கடலை, பெற்றோலிய உற்பத்திகள், பொஸ்பேற், பருத்தி. **இறக்குமதிகள்** (2009):- உணவு வகைகளும் பான வகைகளும் மூலப்பொருட்கள், எரிபொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004):- இந்தியா, மாலி, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், கினியா-பிசோ, நைஜீரியா, தாய்லாந்து.


தேசிய இலச்சினை








## பிரசித்தி பெற்ற இடங்கள் சில......

- நிகோலோ கோபா தேசிய வனவிலங்கியல் பூங்கா
- பேஸ் கஸாமன்ஸ் தேசிய வனவிலங்கியல் பூங்கா
- காராபன் தீவு
- Sine-Saloum கழிமுகம்
- Goree தீவு
- St.Louis பழைமை தலைநகர்


தலைநகரின் ஒருபகுதி




நிகோலோ கோபா தேசிய வனவிலங்கியல் பூங்கா


Goree தீவு


செனகல் ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 1 (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: .................................................. நேரம்: 45 நிமிடங்கள்


29. இன்று வெள்ளிக்கிழமை. நாளை மறுநாள் 20 ஆம் திகதி. சென்ற வெள்ளிக்கிழமை எத்தனையாம் திகதி?
 (1) 2 ஆம் திகதி (2) 11 ஆம் திகதி (3) 18 ஆம் திகதி

30. ஒரு மணித்தியாலத்தில் 10 தொப்பிகள் தைக்கும் தொழிலாளி 90 நிமிடங்களில் எத்தனை தொப்பிகளைத் தைப்பான்?
 (1) 25 (2) 20 (3) 15

31. பாடசாலை விளையாட்டு மைதானத்தில் 35 இலிருந்து 45 வரையிலான எண்கள் பொறிக்கப்பட்ட மேலங்கியுடன் விளையாட்டு வீரர்கள் நின்றனர். மைதானத்தில் நின்ற விளையாட்டு வீரர்கள் எத்தனை பேர்?
 (1) 11 (2) 10 (3) 12

32. 
அன்னாசிப்பழம், உணவு, பழங்கள் ஆகிய மூன்றுக்கும் இடையிலான தொடர்பைக் காட்ட இவ்வுரு வரையப்பட்டுள்ளது. இதில் △ இனால் காட்டப்படுவது எது?
 (1) உணவு (2) அன்னாசிப்பழம் (3) பழங்கள்

33. சம்பூர் மகா வித்தியாலயம் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில், கிண்ணியா மூதூர் கல்வி வலயத்தில் அமைந்துள்ளது. இவை கீழே உள்ளவாறு குறியீடுகளால் காட்டப்படுகின்றன.




34. குமார் படம் ஒன்றினைப் பார்த்து பின்வருமாறு கூறினான், "இந்தப் படத்தில் இருப்பவரின் தந்தை எனது அம்மாவின் தந்தை ஆவார்". அப்படியானால் படத்தில் காணப்படுபவர் குமாரின்....;
 (1) மாமி (2) பாட்டன் (3) மாமா

35. லிங்கனின் ஒரே பிள்ளையாகிய பாபு பாடசாலைக்குத் தாமதமாக வந்து தம்பியுடன் கடைக்குச் சென்று திரும்பி வருவதற்குத் தாமதம் ஏற்பட்டதெனக் கூறினான். இது உண்மையாக இருக்கலாம். இதற்குக் காரணம்,
 (1) பாபு உலாவித்திரிய விரும்புகின்றமை.
 (2) பாபுவிற்குச் சில சகோதரர்களும் சகோதரிகளும் இருக்கின்றமை.
 (3) பாபுவின் சிறிய தகப்பனாரின் ஒரு மகனும் பாபுவின் வீட்டில் இருக்கின்றமை.

★ *36 ஆம், 37 ஆம் வினாக்களுக்கு உரிய விடைகளை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*

36. அடைப்பினுள் தரப்பட்டுள்ள எழுத்துக்களில் மூன்று எழுத்துக்களைப் பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்தி புரதச்சத்து அடங்கியுள்ள உணவுப் பொருளைக் குறிக்கும் பெயரை புள்ளிக்கோட்டில் எழுதுக.


| க, வ, று, லை, ப, ற, ய, கு | .................................... |




37. அடைப்பினுள் தரப்பட்டுள்ள எழுத்துக்களில் நான்கு எழுத்துக்களைப் பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்தி பிராணி ஒன்றின் பெயரை புள்ளிக்கோட்டில் எழுதுக.

| தி, ல, ந், கு, ர, சி, ஆ, க,மை | .................................... |

★ *இவ்வரைபடத்தில் ஒரு குறிப்பிட்ட பாடசாலையின் நூலகத்தில் உள்ள புத்தகத்தின் எண்ணிக்கை காட்டப்படுகின்றது. இதற்கேற்ப, 38-40 வரையுள்ள வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.*




(கணிதப் புத்தகங்களின் எண்ணிக்கை 100 எனில்)

38. சுற்றாடல் புத்தகங்களின் எண்ணிக்கை யாது? ..........................................

39. தமிழ் புத்தகங்களின் எண்ணிக்கை யாது? ..........................................

40. நூலகத்தில் உள்ள மொத்தப் புத்தகங்கள் எத்தனை?..........................................

### வினாத்தாள் I இன் விடைகள்

*(ஜனவரி 5,12 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

| | | | | |
|---|---|---|---|---|
| (01) 2 | (02) 3 | (03) 1 | (04) 2 | (05) 3 |
| (06) 2 | (07) 1 | (08) 1 | (09) 2 | (10) 2 |
| (11) 3 | (12) 3 | (13) 2 | (14) 3 | (15) 1 |
| (16) 2 | (17) 1 | (18) 2 | (19) 2 | (20) 3 |
| (21) 2 | (22) 1 | (23) 3 | (24) 2 | (25) 3 |
| (26) 2 | (27) 3 | (28) 1 | (29) 2 | (30) 3 |
| (31) 1 | (32) 2 | (33) 2 | (34) 3 | (35) 3 |
| (36) பயறு | (37) சிலந்தி | (38) 50 | (39) 150 | (40) 400 |

## ஷ்... உங்களுக்கு மட்டும்!

★ நட்சத்திர மீன்களுக்கு மூளை கிடையாது.





★ உலகிலேயே மிகப் பயங்கரமான உயிரினம் ஈ.

★ பட்டம் விடும்போது ஏற்படும் விபத்துக்களால் உலகில் ஆண்டுதோறும் சராசரியாக 12 பேர் வரை இறக்கின்றனர்.



★ ஒட்டகச்சிவிங்கி 18+ அங்குலம் நீளமுள்ள தன் நாக்கைக்கொண்டே அதன் காதுகளைச் சுத்தம் செய்கின்றது.



★ கத்தரிக்கோலை அறிமுகப்படுத்தியவர் லியனாடோ டாவின்சி.



★ சர்வாதிகார ஆட்சியை நடத்தியதோடு, தம் ஆட்சிக்காலத்தில் லட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்த ஹிட்லர், மாமிச உணவு வகைகளை உண்டதில்லையாம்.




★ பிறந்த கங்காருக் குட்டியானது தேக்கரண்டியில் வைக்கக்கூடிய அளவுக்கு மிகச் சிறியதாக இருக்கும்.

★ நம்மில் எவராலும் கண்களைத் திறந்துகொண்டு தும்ம முடியாது.

## சாதனைக்கு வயது தடையில்லை

சாதனை புரிவதற்கு வயது தடையாக இருப்பதில்லை என்பதை உலகளவில் புகழ்பெற்ற பலர் தங்கள் இளம் வயதில் நிகழ்த்தி-நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்களில் சிலரின் சாதனைகள் இதோ...

✱ ரவீந்திரநாத் தாகூர், ஷேக்ஸ்பியரின் 'மெக்பெத்' (Macbeth) எனும் நாடகத்தை வங்காள மொழியில் மொழிபெயர்த்த போது, அவருக்கு வயது 14.


ரவீந்திரநாத் தாகூர்

✱ ஏழைத் தொழிலாளியின் மகனாகப் பிறந்து பெரும் சீர்திருத்தவாதியாக மாறிய போது, மார்ட்டின் லூதர் கிங்குக்கு வயது 22.


மார்ட்டின் லூதர்

✱ பரிணாம வளர்ச்சி பற்றிய ஆய்வுக்காகக் கப்பலில் பயணம் மேற்கொண்டபோது, சார்ள்ஸ் டார்வினுக்கு வயது 22.


சார்ள்ஸ் டார்வின்

✱ நெம்பு கோல் போன்ற பல்வேறு அம்சங்களுக்கு அடிப்படையாக அமைந்த தத்துவத்தைக் கண்டுபிடித்தபோது, கலிலியோ கலிலிக்கு வயது 25.

✱ தொலைபேசியை உருவாக்கியபோது, அலெக்சாண்டர் கிரகம்பெல்லுக்கு வயது 29.

✱ முப்பது வயதுக்குள் ஷேக்ஸ்பியர் தனது முக்கிய நாடகங்கள் அனைத்தையும் எழுதி முடித்துவிட்டார்.

✱ 'பிக்விக் பேப்பர்ஸ்' என்ற மகத்தான நகைச் சுவை நாவலை எழுதிப் பிரபல மடைந்த போது, சார்ள்ஸ் டிக்கன்ஸுக்கு வயது 24.


சார்ள்ஸ் டிக்கன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எந்தவோர் இடத்திலும் தங்கி நின்று ஓய்வெடுக்காமல் தொடர்ந்து சுமார் 11 ஆயிரம் கிலோமீற்றரிலும் அதிக தூரம் (சுமார் 7,000 மைல்கள்) பறக்கும் பறவையினம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா?, அதுதான் 'கொட்விட்' (Godwit) பறவை**






# சுமார் 11 ஆயிரம் கி.மீ பறக்கக்கூடிய பறவை



### தொடர்ச்சியான பயணம்

ஒவ்வோர் இலையுதிர் காலத்திலும் அலாஸ்காவில் இருந்து நியூஸிலாந்து வரை எட்டு நாட்கள் பயணத்தை மேற்கொள்கின்றதாம் இந்த கொட்விட் பறவை.

இந்தப் பறவையானது இடைவிடாது தொடர்ந்து பறப்பதுடன்,தனது தொடர்ச்சியான பயணத்தின் போது ஓய்வெடுப்பதற்கோ, உணவு உட்கொள்வதற்கோ ஒருமுறைகூட பயணத்தை முறிப்பதில்லை என்பதே இதன் சிறப்பியல்பாகும். இப்பறவை ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை தனது உடல் எடையில் 0.41 சதவீத அளவு உணவைக் கிரகித்துக்கொண்டு புயல் வேகத்தில் பயணத்தை மேற்கொள்கின்றது. வசந்தகாலம் வந்ததும் மறுபடியும் நியூஸிலாந்தில் இருந்து அலாஸ்காவுக்கான 11 ஆயிரம் கிலோமீற்றர் பயணத்தை மேற்கொள்கின்றது.

### எஸ்டர்ஸின் ஆராய்ச்சி

சுவீடனின் லண்ட் பல்கலைக்கழக சுற்றுச்சூழலியல் பேராசிரியர் எண்டர்ஸ் ஹெடன்ஸ்ட்ரம் என்பவர் இந்தப் பறவை இனத்தால் எவ்வாறு நீண்ட தூரம் இடைவிடாமல் பறக்க முடிகின்றது? என வியந்து, அது குறித்து ஆராய்ந்தார். ஆய்வின் முடிவில், தொடர்ச்சியாக நீண்ட தூரத்துக்குப் பறப்பதில், மனிதனால் உருவாக்கப்பட்ட விமானங்களைவிட, மிகச் சிறந்தது இந்தப் பறவை என்று அவர் கூறியுள்ளார். அத்துடன், இந்த கொட்விட் பறவை சுமார் எட்டு நாட்களுக்கு தொடர்ச்சியாகத் தனது பயணத்தை மேற்கொள்ளும் ஆற்றல் படைத்தது எனவும் அவர் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்தப் பறவையை இடைநிற்காமல் தொடர்ந்து இவ்வாறு நீண்ட தூரம் பறக்க வைப்பது எது?. இவை எவ்வாறு சுமார் எட்டு நாட்களுக்கு உறக்கம் மற்றும் உணவின்றிச் சமாளிக்கின்றன? என்பன பற்றி ஆராய்ந்ததில், ஏனைய பறவைகளுடன் ஒப்பிடும்போது, இவை பறப்பதற்கு குறைவான சக்தியையே பயன்படுத்துகின்றன என்பது தெரியவந்துள்ளது. அத்துடன், இப்பறவைகள் தாம் பறக்கும் ஒவ்வொரு மணி நேரத்துக்கு ஒருமுறையும் தமது உடல் எடையில் 0.41 சதவீத அளவை உணவாகக் கிரகித்துக்கொள்கின்றன என்றும் எண்டர்ஸ் கூறியுள்ளார். இதுதவிர, வேறு சில காரணங்களும் இருக்கின்றன. முழுப் பயணத்துக்கும் சக்தியை எடுத்துச் செல்லும் வகையில் பறவையின் உடல் எடையும் அளவும் ஈடுகொடுப்பது முக்கியமான ஒரு விடயம்.

மேலும், கொட்விட் பறவைக்கு உரிய சக்தியை அளிப்பது எது? என ஆய்வு செய்ததில், அது உட்கொள்ளும் உணவுகளிலுள்ள கொழுப்பும் புரதமும்தான் முக்கிய காரணம் எனத் தெரியவந்துள்ளது. தவிர, காற்றின் எதிர்ப்பைக் குறைக்கும் விதத்திலான 'ஏரோடைனமிக்' உடல் அமைப்பும் அதற்குப் பெரிதும் உதவுகிறது என்றும் கூறப்படுகின்றது.

# 'சீபா' என்றால் என்ன?






**1998** ஆம் ஆண்டு இலங்கை இந்தியாவோடு இணைந்து இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தைச் (India-Sri Lanka Free Trade Agreement) செய்து கொண்டது. 2000 ஆம் ஆண்டில் இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது. அந்தவகையில், உலகில் பல்வேறு நாடுகளுக்கிடையிலும் இத்தகைய ஒப்பந்தங்கள் நிகழ்ந்தே இருக்கின்றன. இதற்குரிய காரணம்,நாடுகளுக்கிடையே வர்த்தக நடவடிக்கைகள் நிகழும் போது, வசூலிக்கப்படும் வரியை இயன்ற வரை குறைப்பதன் மூலம் குறைந்த விலையில் பொருட்களை வாங்க வசதி செய்வதேயாகும். இதன் மூலம் நாடுகளுக்கிடையில் வர்த்தகம் பெரு வளர்ச்சி பெறும் என அனுபவத்தில் கண்டறியப்பட்டிருக்கின்றது.







இலங்கை-இந்தியாவுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட மேற்படி சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பொருள் வர்த்தகத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டிருந்தமையால், பத்து வருடங்களுக்குப் பின்னர் அதாவது, 2010 ஆம் ஆண்டில் அதில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

இவ்வாறாகத்தான் பரிபூரண பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் எனும் 'சீபா' (CEPA) உருவாகியது.

இலங்கை-இந்தியாவுக்கிடையிலான பரந்துபட்ட பொருளாதார பங்குடமையிலான உடன்படிக்கையே 'சீபா'(CEPA: Comprehensive Economic Partnership Agreement) எனப்படுகிறது. இது தற்போதும் பேச்சுவார்த்தை மட்டத்திலேயே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

'சீபா' ஒப்பந்தத்தில் பொருட்கள், சேவைகள் மற்றும் முதலீடு ஆகிய துறைகள் உள்ளடங்குகின்றன. அந்தவகையில், தற்போது நடைமுறையில் இருக்கின்ற இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை (ISLFTA) விருத்தி செய்வதற்கு இந்த 'சீபா' ஒப்பந்தம் அவசியமாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரையில் 'சீபா' ஒப்பந்தம் தொடர்பிலான 13 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளும் நோக்கிலேயே 'சீபா' உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளதாக மேலும் கூறப்படுகின்றது.

**ஏ.ஜே.எம். நிழாம்**





# உயிரியல் எரிவாயுவில் இயங்கும் ரயில்



உலகில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடானது மாற்று எரிபொருளின் தேவையை அதிகரித்திருக்கின்றது. இதன் காரணமாக, பலவிதமான மாற்று எரிபொருட்கள் தயாரிக்கப்பட்டுப் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. இந்தப் பட்டியலில் அண்மையில் இணைந்ததுதான் மாட்டுச்சாணத்தின் மூலம் தயாரிக்கப்படும் எரிபொருள். இந்த எரிவாயுவைக் கொண்டு இயங்கும் பயணிகள் ரயில் சேவை ஒன்று முதன்முதலாக அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள ஒக்லஹோமா-போர்ட் வொர்த் நகரங்களுக்கு இடையே இந்த பயணிகள் ரயில் சேவை இயங்குகின்றது. இந்த ரயிலுக்கு 'ஹார்ட்லேண்ட் ஃப்ளையர்' (Heartland Flyer) என்று பெயரிடப்பட்டுள்ளது. பொதுவாக உயிரியல் எரிபொருளைப்



பயன்படுத்தும்போது, வாகனத்தின் என்ஜினுக்குள் அழுத்தம் அதிகரித்துப் பாதிப்புகள் ஏற்படும். எனவே, இந்த விடயத்தைக் கருத்தில்கொண்டு சில மாற்றங்களுடன் குறித்த ரயிலின் என்ஜின் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ரயில் தினமும் 418 மைல் தூர பயண சேவையில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிர்காலத்தில் நி





பனிமலை

ரொபின் பறவை

**கடந்த மாதங்களிலும் தற்போதளவிலும் உலகின் பல்வேறு பாகங்களில் குளிர்காலநிலை நிலவுகின்றதை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. இதன்படி, டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களிலேயே இவ்வாறான காலநிலையை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. அத்துடன், இக்காலப்பகுதியில் வட துருவத்தில் இருக்கும் பலநாடுகளிலும் குளிரான காலநிலையே நிலவும். இதன்போது, சூழல் வெப்பநிலை மிகவும் குறைவாக இருப்பதோடு, இரவுப் பொழுது அதிகமாகவும் பகல் பொழுது குறுகியதாகவும் காணப்படும்**

## பருவ மாற்றங்கள்

பருவ மாற்றங்கள் ஏற்பட இரண்டு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றில் முதலாவது, புவி அதன் அச்சிலிருந்து 23 $^{1/2}$ பாகை சாய்ந்திருப்பதாகும். இரண்டாவது, புவி தனது அச்சில் தன்னைத் தானே சுற்றுவதாகும்.இதனால், பூமியில் சகல பாகங்களுக்கும் சம அளவில் சூரியஒளி கிடைப்பதில்லை. ஒரு சில பகுதிகளுக்கு வருடம் முழுவதும் நன்கு சூரியஒளி கிடைக்கும். அதுவே, புவி மையத்திலிருந்து செல்லச் செல்ல சூரியஒளி கிடைப்பது குறைந்துவிடும். சூரியனைச் சுற்றி புவி சுழலும்போது, ஏற்படும் சுழற்சி முறையைப் பொறுத்து, பருவ மாற்றங்கள் ஏற்படும். பருவ மாற்றங்கள் நான்கு வகைப்படுகின்றன. அவையாவன; இளவேனிற்காலம் (வசந்தகாலம்), கோடைகாலம், இலையுதிர்காலம், குளிர்காலம் என்பனவாகும். இங்கு குளிர்காலம் என்பது மிகக் குறைவான சூரியஒளி கிடைக்கும் காலப்பகுதியாகும்.

## பனியால் மூடப்படும் இயற்கை

பனி பொழியும் காலத்தில் வழமையாகக் காணக் கிடைக்கும் உயிரினங்களை சூழலில் காண முடிவதில்லை. அத்துடன், மரங்கள் பனியால் மூடப்பட்டு தரைகளில் பனி விழுந்து, உறைந்தும் காணப்படும். மலைப் பகுதிகளும் முற்றாகப் பனியினால் மூடப்பட்டு விடும். சூழல் எங்கும் ஒரே பனி மூட்டமாகவே காணப்படும். இக்காலத்தில் இயற்கையானது முற்றிலும் மாறுபட்ட நிலையில் காணப்படும்.



துருவப்பகுதியில் வசிக்கும் பனிக்கரடி

## வட துருவத்தில் குளிர்காலம்

பூமியின் வட துருவத்திற்கு வருடத்தின் டிசம்பர், ஜனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய மாதங்களில் மிகக் குறைவான அளவிலேயே சூரியஒளி கிடைக்கின்றது. இதனால், டிசம்பர் முதல் பெப்ரவரி வரையான காலப்பகுதியில் வட துருவ நாடுகளில் குளிர்காலம் நிலவுகின்றது. ஐக்கிய ராச்சியம், ரஷ்யா, ஜப்பான் போன்ற வட துருவத்தில் அமைந்துள்ள நாடுகளில் இக் காலப்பகுதியிலேயே குளிர்காலம் ஆரம்பமாகின்றது.

## தென் துருவத்தில் குளிர்காலம்

வருடத்தின் ஜூன், ஜூலை, ஓகஸ்ட் ஆகிய மாதங்களில் தென் துருவத்தில் அமைந்துள்ள நாடுகளுக்கு சூரியஒளி கிடைப்பது குறைவடைகின்றது. இதனால் அந்தப் பகுதிகளில் அமைந்துள்ள அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகளில் ஜூன் தொடக்கம் ஓகஸ்ட் மாதக்காலப்பகுதிகளிலேயே குளிர்காலம் ஆரம்பமாகின்றது.

## பனி என்றால்....

பனி என்பது நீரின் திண்ம நிலையாகும். நீராவியினால் வளிமண்டலம் கனமாகியிருக்கும்போது, அதாவது, வளிமண்டலத்தில் ஈரப்பதன் 90 சதவீதத்தினை அடையும்போதும் வளிமண்டல வெப்பநிலை 0°Cஇலும் குறைவாக இருக்கும்போதும் பனி உருவாகின்றது. இந்த நிலையின் போது, மழை நீருக்குப் பதிலாக பனிப் பொழிவு ஏற்படுகின்றது.

## பனிப்பொழிவின் போது...

குளிர்காலத்தின் பிரதான இயல்பு பனிப்பொழிவாகும். இந்த பனிப் பொழிவு மக்களின் அன்றாட வாழ்க்கைக்கும் வன விலங்குகளுக்கும் இடையூறுகளை ஏற்படுத்துகின்றது. பயிர்ச்செய்கைகளும் பாதிக்கப்படுகின்றன. வீதிகள் பனிப்பொழிவினால் உறைந்திருக்கும். இதனால், பெருந் தெருக்கள் மூடப்படுவதுடன் பனியினை அடிக்கடி அகற்றவும் நேரிடுகின்றது.

## வருடந்தோறும் பனியால் மூடப்படும் துருவப்பகுதி

வட-தென் துருவங்களில் உள்ள நாடுகளுக்கு குளிர்காலப்பகுதியில் மட்டும் பனிப்பொழிவு ஏற்படுவது இயற்கையான விடயமாகும். எனினும், பூமியின் வட-தென் துருவ முனைகளில் உள்ள ஆர்க்டிக் மற்றும் அண்டார்க்டிக் ஆகிய கண்டங்கள் வருடம் முழுவதும் பனியால் மூடப்பட்டிருக்கும். இந்த துருவப்பகுதிகள் வருடத்தில் ஆறு மாதங்கள் கடும் இருளாகவே இருக்கும்.

## ஆர்க்டிக் வலயம்

ஆர்க்டிக் பிரதேசம் எந்நாளும் பனியால் மூடப்பட்டிருந்தாலும், இப்பகுதி கனிம வளங்களினாலும் வன விலங்குகளாலும் நிறைந்துள்ளது. குளிர்காலத்தில் ஆர்க்டிக் வலயத்தின் வெப்பநிலை -60°C இலும் குறைவாகக் காணப்படும். கோடை காலத்தில் 0°C யிலும் வெப்பநிலை அதிகரிக்காது.இதனால், கோடைகாலத்தில் பனித்தட்டுகள் பெருமளவில் உருகுவதில்லை.

இந்தப் பிரதேசத்தில் 'துந்திரா' சூழல் தொகுதியினையே காண முடியும். பாசிகள், ஊசியிலைக்காடுகள், பற்றைகள் மற்றும் ஒரு சில பூக்காத தாவரங்களையும் இங்கு காணலாம். அதே போன்று; ஆர்க்டிக் நரிகள், பனிக்கரடிகள் மற்றும் இதர பனி உயிரினங்களும் இங்குள்ளன. அத்துடன், இப்பகுதிகளில் சனத்தொகை சுமார் எட்டு லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. அலாஸ்காவில் வசிக்கும் எஸ்கிமோக்கள், கெனடா மற்றும் கிறீன்லாந்தின் இனியுட்கள் மற்றும் சைபீரியாவின் யுஇட்டிகள் இந்த சனத்தொகையில் அடங்குவர்.



## அண்டார்க்டிக்கா கண்டம்

இது புவியின் தென் முனையின் அமைந்துள்ள கண்டமாகும். 4.8 கி.மீ. ஆழத்திற்கு பரவியுள்ள கனமான பனித்தட்டினால் ஆனது. உலகில் உள்ள மொத்த நன்னீரின் அளவில் 80 சதவீதமானவை இந்தக் கண்டத்திலேயே உள்ளடங்கியுள்ளது. இங்கு மக்கள் வாழ்வதில்லை. எனினும், பல்வேறு ஆய்வுகளில் ஈடுபடுவதற்காக ஆய்வாளர்கள் பலர் இங்கு தங்கியுள்ளனர்.

## பனிப்பொழிவும் இக்கட்டான வாழ்க்கையும்

குளிர்காலம் ஆரம்பித்து நாட்கள் நகரும்போது, சில நாடுகளில் பனி மழை பொழியும். வெண்பஞ்சுக் குவியல்கள் போல பனி பொழிவது ரம்மியமான காட்சியாகத் தோன்றும். இது கண்களுக்கு அழகு தரும் காட்சியாக அமைகின்ற போதிலும், குளிர்காலத்தில் இந் நாடுகளில் வசிக்கும் மக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

குளிர்காலத்தில் ஏற்படும் பனிப்புயல், அதிக குளிர், சூரியஒளி குறைந்தளவில் கிடைத்தல், ஈரலிப்பான மண் என்பன அன்றாட வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கின்றன. வீதிகளில் நடமாடுவோரின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே இருக்கும். இக்காலங்களில் வீட்டில் வசிப்பதும் மிகுந்த சிரமமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழும் மாற்றங்கள்

லை கடப்போர்


பனியால் மூடப்பட்டுள்ள வீதிகள்



இடம்பெயரும் விலங்குகள் மற்றும் ஆர்க்டிக் டர்ன் பறவை


குளிர்காயும் அணில்


பனிமனிதன்

குளிர்காலத்தில் மலரும் மலர்கள்

குளிர்காலத்திற்கேற்ப ரோமங்கள் வெள்ளை நிறமாக மாறியுள்ள முயல்


குளிர்காலத்தில் உலகின் பனிமூட்ட பகுதிகள்

'ஹைபோதர்மியா' (அசாதாரணமான வகையில் உடலின் வெப்பநிலை குறைதல்), பனிக் குருடு(Snow Blind) ஆகிய நோய்கள் ஏற்படக்கூடும்.

இதனால், குளிர்கால நாடுகளில் வசிக்கும் மக்கள் குளிர்காலம் தொடங்குவதற்கு முன்பிருந்தே முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

கவே இருக்கும். எனவே, பனி பொழியும் காலத்தில் அப்பகுதிவாழ் மக்கள் குளிரைத் தாங்கும் உடைகளை அணிந்து, உடல் வெப்பநிலையைப் பேண வேண்டியதாக இருக்கும். குழந்தைகள், வயோதிபர்கள், சுகவீனமுற்றோர் போன்றவர்களுக்கு இது மோசமான காலநிலையாகவே காணப்படுகின்றது. அதிக குளிரைத் தவிர்த்துக்கொள்ள பலர் தமது வீடுகளுக்குள்ளேயே பொழுதினைக் கழிப்பர். அடுப்புகளை எரிய விட்டும் ஹீட்டர்களைப் பயன்படுத்தியும் குளிரைப் போக்கிக்கொள்வர். இந்தக் காலப்பகுதியில் சூழலில் நிலவும் கடுமையான குளிர் காரணமாக

## கடும் குளிரை எதிர்கொள்ளல்

**✱ மனித உடல் அமையப்பெற்றுள்ள விதம்:** குளிர்கால நாடுகளில் வசிக்கும் மக்களுக்கு இயற்கையாகவே அதனைத் தாங்கும் உடற்திறன் ஏற்பட்டு விடுகின்றது. உலர் வலய நாடுகளில் வசிப்போரைப் போன்றல்லாது குளிர் நாடுகளில் வசிப்போரின் தோல்களின்கீழ் உள்ள கொழுப்புச் செல்கள் கடினத்தன்மை கொண்டதாக இருக்கும். இதனால், குளிரைத் தாங்கும் சக்தி அவர்களுக்கு அதிகமாக ஏற்படுகின்றது. அதேபோல், இவர்கள் தங்களின் உணவுப் பழக்கம் உட்பட, ஏனைய நடவடிக்கைகளையும் குளிர்மையான காலநிலைக்கு ஏற்ற விதத்தில் மாற்றிக்கொள்கின்றனர்.

**✱ இடம்பெயர்தல்:** குளிர் காலநிலை ஏற்படுவதற்கு முன்னர் பல வன விலங்குகள் அப்பிரதேசத்திலிருந்து வேறு பிரதேசங்களை நோக்கி இடம்பெயர்ந்து விடுகின்றன. பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள், மாடுகள், மான்கள் இவற்றில் பிரதானமானவை. அத்துடன், எமது சுற்றுப்புறச் சூழலில் காணப்படுகின்ற மஞ்சள் குருவி போன்ற பறவை இனங்கள் குளிர்காலத்தினைத் தவிர்த்துக்கொள்ள உலர் வலய நாடுகளை நோக்கி இடம்பெயர்கின்றன. ஆர்க்டிக் டர்ன் பறவைகள், எல்க் மான்கள் போன்றன இவ்வாறு மிக நீண்ட தூரம் பயணம் செய்கின்ற போதும், காடினல் மற்றும் ரொபின் போன்ற பறவைகள் இடம்பெயர்ந்து செல்வதில்லை.

**✱ குளிரிலிருந்து [illegible]** [illegible] கும் ஒருசில வனவிலங்குகள் குளிர் காலம் தொடங்கியவுடன் நிலத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தமது இருப்பிடங்களுக்குள் துயில்கொள்ள ஆரம்பித்து விடுகின்றன. தவளைகள், பாம்புகள், வௌவால்கள் என்பன இவ்வாறான விலங்குகளாகும். இந்த விலங்குகள் தமது இருப்பிடங்களுக்குள் துயில் கொண்டபடியே இக்காலத்தைக் கழித்து விடுகின்றன. சூழலில் வெப்பநிலை அதிகரித்தவுடன் அவை மீண்டும் தமது இருப்பிடத்தை விட்டு வெளியேறி விடுகின்றன. உறக்க நிலையில் உடற்சக்தி விரயமாவது குறைவடைகின்றமையால், அவற்றுக்கு அடிக்கடி உணவுத் தேவையும் ஏற்படாது. நிலத்தின் கீழ் வெளிப்புறச் சூழலினைவிட அதிகளவு வெப்பநிலை காணப்படுவதாலேயே இவை இவ்வாறு செயற்படுகின்றன.

**✱ குளிர்காலத்தில் உணவு சேகரிப்போர்:** பீவர், அணில் போன்ற விலங்குகள் குளிர்காலத்தில் தமது பயன்பாட்டிற்குத் தேவையான உணவுகளை முன்கூட்டியே சேகரித்து வைக்கின்றன. இவை தமது இருப்பிடங்களில் இருந்துகொண்டே குளிர்காலத்தினைக் கழிக்கின்றன.

**✱ உடல் மாற்றம்:** குளிர்காலத்தில் சில விலங்குகளின் இறகுகளும் ரோமங்களும் வெண்மை நிறமாக மாறிவிடுகின்றன. அத்துடன், உடற்தசைகளும் கடும் குளிரைத் தாங்கக் கூடிய வகையில் மாறிவிடும். ஆர்க்டிக் நரிகள், வெண்மை நிற வால்கொண்ட முயல்கள் என்பனவற்றின் ரோமங்கள் இவ்வாறு வெண்மையாக மாறிவிடும். சில விலங்குகளின் தோலில் உள்ள ரோமங்கள் குளிர்காலத்தில் நீண்டு வளரும். அதனால், அவற்றுக்கு உடல் வெப்பநிலையைப் பேணிக்கொள்ள முடியும்.

(இ)


பனிச்சறுக்கல்


ஐஸ் ஹொக்கி


பனி ஊர்திப் பயணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிக்குபுக்கு ரெயில்

சிக்குப் புக்கு ரெயில்
சீராய் ஓடும் ரெயில்
பக்கமுள்ள கைகாட்டியை
பார்த்து ஓடும் ரெயில்

மக்கள் கூட்டம் நிறைந்திருக்க
பக்குவமாகச் சுமந்து கொண்டு
தெற்கு வடக்கு என
விரைந்து ஓடும் ரெயில்

பச்சைக் கொடியைப் பார்க்க
பறக்குது அந்த ரெயில்
சிவப்புக் கொடியைப் பார்க்க
ஒதுங்குது இந்த ரெயில்

பட்டணமும் போகுது
பட்டிக்காடும் போகுது
டிக்கெட் மட்டும் எடுத்துக்கிட்டா
போதும் ரெயிலில் போயிடலாம்

# கிருமிகளை ஆராய்ந்த லூயிஸ் பாஸ்டர்



லூயிஸ் பாஸ்டர் பிறந்த வீடு

நோய்களுக்கெல்லாம் கிருமிகள்தான் காரணம் என்று கண்டறிந்து ஒவ்வொரு நோய்க்கும் உரிய கிருமிகளை அழிப்பதன் மூலம் நோயைக் குணப்படுத்தலாம் என்று கண்டறிந்தவர் லூயிஸ் பாஸ்டர் என்ற பிரெஞ்சு நாட்டு விஞ்ஞானி ஆவார். இவர் தனது ஆராய்ச்சியின் பயனாக பறவைகளுக்கு வரும் நோயைத் தடுக்கவும், மிருகங்களுக்கு ஏற்படும் ''அந்த்ராக்ஸ்'' (Anthrax) எனும் நோயைத் தடுக்கவும் தடுப்பு மருந்துகளைக் கண்டறிந்தார்.

பால்கெட்டுப் போவதற்குக் காரணம் கிருமிகள் தான் எனக் கண்டறிந்து பால் கெட்டுப் போகாது நீண்டகாலம் பாதுகாக்கக்கூடிய முறையையும் அவர் கண்டறிந்தார். இவரது பெயரால் பாலைப் பாதுகாக்கும் முறைக்குப் 'பாஸ்டரைசேசன்' என்னும் பெயர் வழங்கப்படுகின்றது.

லூயிஸ் பாஸ்டர் 1822 ஆம் ஆண்டு பாரிஸில் பிறந்தார். இளம் வயதிலிருந்தே பாஸ்டர் சிறந்த தேசபக்தராக விளங்கினார்.



இயற்கையாகவே பாஸ்டர் கூச்ச சுபாவமுள்ளவர்.ஆனால், இயற்கையை ரசிப்பதிலும், ஓவியங்கள் வரைவதிலும், விஞ்ஞானத்திலும் ஆர்வமுடையவராக விளங்கினார். பாஸ்டர் தனது கிருமி ஆராய்ச்சிகளின் பயனாக விசர் நாய்க்கடிக்குரிய மருந்தைக் கண்டுபிடித்தார். இவர் மனித இனத்தைப் பல நோய்களிலிருந்து காப்பாற்ற பல சிகிச்சை முறைகளைக் கண்டறிந்ததால் இவர் பிரெஞ்ச் மக்களால் மிகவும் நேசிக்கப்பட்டார்.

அத்துடன், பாஸ்டர் பட்டுப் பூச்சிகளுக்கு வரும் நோய்களுக்குரிய மருந்தைக் கண்டுபிடித்து பட்டுப்பூச்சி வளர்க்கும் தொழில் அழிந்து விடாமல் காப்பாற்றினார்.

எச்.எம்.அஸ்லம்,
மட்/ஓட்டமாவடி
தேசிய பாடசாலை



# உணவு தந்த பிரதமர்

உணவு தந்த பிரதமர் என அழைக்கப்படுபவர் முன்னாள் பிரதமர் அமரர் டட்லி சேனாநாயக்கா



அவர்களாகும். இவர் டி.எஸ். சேனாநாயக்கா அவர்களின் மகனாவார். 1911 ஆண்டு பிறந்த இவர் தமது தந்தையின் மறைவின் பின்னர் பிரதமரானார்.

தமது ஆரம்பக் கல்வியை பம்பலப்பிட்டி வஜிராராமையில் பயின்ற இவர், பின் இங்கிலாந்தின் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் சட்டக்கல்வி பயின்று 1933 ஆம் ஆண்டிலிருந்து சட்டத்தரணியாகக் கடமை புரிந்தார்.

அமரர் டட்லி சேனாநாயக்கா அவர்கள் தமது தாய் நாட்டிற்குச் சேவை செய்ய வேண்டும் என்றும் நெல் உற்பத்தியில் தன்னிறைவு பெற வேண்டும் என்ற நோக்கோடும் செயல்புரிந்தார். விவசாய நிலையங்களை நிறுவுதல், பல்நோக்குத் திட்டங்களைச் செயற்படுத்தல், விவசாய அபிவிருத்தியின் பொருட்டுக் குளங்களைப் புனரமைத்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் இலங்கையை தன்னிறைவாக்க முற்பட்டார்.



இவர் மக்களுக்கு இலவசமாக அரிசி வழங்கியமையால் 'சோறு வழங்கிய தந்தை' எனவும் அழைக்கப்படுகிறார். தமது



தாய் நாட்டிற்கும் மக்களுக்கும் பெரும் சேவை புரிந்த இவர் 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி காலமானார்.

சி.தூயவன் தரம்-09
யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்

# பிறருக்கு உதவும் குணம்



கொடிய நரியொன்று ஆழமான ஒரு குழியில் விழுந்துவிட்டது. நரி துள்ளியது. குதித்தது. கை கால்களை அடித்தது. எனினும், அதனால், வெளியே வர முடியவில்லை. இறுதியில் 'ஐயோ நான் இங்கே கிடந்து பசியால் செத்துவிடுவேனோ!'' என்று பயந்தது.

இவ்வாறு அது யோசித்துக் கொண்டிருந்த போது,குழியின் வெளியே ஓர் ஆடு கத்தும் சத்தம் கேட்டது. நரியின் கண்கள் நயவஞ்சக உணர்வால் பளபளக்கலாயிற்று.

உடனே, அது ஆட்டுக்குக் குரல் கொடுத்தது. 'சகோதரி ஆடே சகோதரி ஆடே உனக்குத் தண்ணீர் தாகமா? பார் இங்கே எவ்வளவு குளிரான, இனிமையான தண்ணீர் இருக்கிறதென்று. வா, வந்து நீரை அருந்தி உன் தாகத்தைத் தணித்துக்கொள்'' என்று சொன்னது. அப்பாவியான அந்த ஆடு, தந்திரம் மிக்க நரியின் வார்த்தையில் ஏமாந்து விட்டது. உடனே அது நரி இருக்கும் குழிக்குள் பாய்ந்தது. நரியோ ஆடு இவ்வாறு குதிப்பதையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. உடனே அது ஆட்டின் முதுகில் ஏறி குழிக்குள்ளிலிருந்து தந்திரமாக வெளியே வந்துவிட்டது.

பின்னர், ஆட்டைப் பார்த்து 'ஆட்டு இனமே மடையர்கள்தான் ஏய்! முட்டாள் ஆடே இவ்வளவு விரைவாக யாரையும் நம்பலாமா? இனி இங்கே கிடந்து செத்துப்போ' என்று சொன்னது. அதற்கு ஆடு 'கொடியவனே! பண்பாடானவர்கள் ஒரு போதும் தமது சுபாவத்தை விட்டு விட மாட்டார்கள் என்பதை நீ அறிய மாட்டாயே. ஆபத்தை சகித்துக் கொண்டு பிறருக்கு உதவும் பணியில் அவர்கள் ஈடுபட்டிருப்பார்கள். நீயே யோசித்துப்பார், நீ இங்கே இருந்திருந்தால் இங்கேயே கிடந்து செத்துப் போயிருப்பாய். ஆனால், என்னிடம் உன்னைப் போன்ற கெட்ட குணம் இல்லை. ஆதலால், யாராவது என்னைக் காப்பாற்றுவார்கள் என்னும் நம்பிக்கை எனக்கிருக்கிறது, என்று கூறியது. அந்த ஆட்டின் நம்பிக்கையின்படியே மறுநாள் இடையன் ஒருவனால் அந்த ஆடும் காப்பாற்றப்பட்டது.

பாத்திமா றிஸ்வானா ரவுப்,
கே/மாவ அல்-அஸ்ஹர் மு.ம.வி., ஹெம்மாதகம

# என்னைக் கவர்ந்த பெரியார்

''தோன்றிற் புகழோடு
தோன்றுக-அஃதிலார்
தோன்றலிற் தோற்றாமை நன்று''

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு ஏற்ப புகழோடு தோற்றி, புகழோடு மறைந்த அறிஞர் முஹம்மத் காஸீம் சித்திலெப்பை அவர்களே, என்னைக் கவர்ந்த பெரியாராவார். இவர்கள் ஈழத் திருநாட்டின் கண்டி மாநகரில் 1838 ஆம் ஆண்டு பிறந்தார். வசதியான குடும்பத்தில் பிறந்த சித்திலெப்பை அவர்கள் சிறு வயது முதல் செல்வச் செழிப்புடன் வளர்ந்தார். கல்வியில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த இவர் முறையாகக் கல்வி கற்று சட்டத்தரணியாகப் பணிபுரிந்தார்.

இவர் வாழ்ந்தகாலம் ஆங்கிலேயர் ஆட்சி செய்தகாலம் ஆகையால் சைவத்தையும் தமிழையும் வளர்க்க அரும்பாடுபட்ட ஆறுமுக நாவலரைப் போல் அறிஞர் சித்திலெப்பை அவர்கள் இஸ்லாத்தையும் தமிழையும் வளர்க்க அயராது உழைத்தார். இவர்கள் மொழி, இலக்கியத்துறைக்கு ஆற்றிய பங்கு அளப்பரியது. அத்துடன், பத்திரிகை ஆசிரியராகவும் நாவலாசிரியராகவும் நூலாசிரியராகவும் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன.

சித்திலெப்பை அவர்கள் முஸ்லிம் நேசன், ஞான தீபம் போன்ற பத்திரிகைகளை வெளியிட்டதுடன், அதன் ஆசிரியராகவும் பணி புரிந்துள்ளார். அறிஞர் சித்திலெப்பை என்றதுமே இலக்கிய ஆர்வலர்களிடையே உடன் தோன்றும் நினைவு சித்திலெப்பை அவர்கள் நாவல் துறைக்கு ஆற்றிய பெரும் பங்களிப்பாகும்.

இவ்வாறாக, நாட்டுக்கு அரும்பணி ஆற்றிய அறிஞர் முஹம்மத் காஸிம் சித்திலெப்பை அவர்கள் அறுபது வருடம் இப்புவியில் வாழ்ந்து அரும்பணிகள் பல புரிந்து 1898 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி இவ்வுலகை விட்டு மறைந்தார்.



ஏ.எச்.ஜனுல் பாஹிமா,
தரம் - 11,
பொலன்னறுவை மு.ம.கல்.,
பொலன்னறுவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# துருவங்கள் பற்றி அறிவோம்

**புவி அச்சின் இரு முனைகளிலும் துருவங்கள் காணப்படுகின்றன. பூமத்திய ரேகைக்கு வடக்கே அமைந்துள்ள முனையில் வட துருவமும் தெற்கே அமைந்துள்ள முனையில் தென் துருவமும் அமைந்துள்ளன. இவ்விரு துருவங்களும் ஒரே இயற்கை அமைப்பாகவே உள்ளன என நாம் பொதுவாக நினைப்பதுண்டு. ஆனால், அது உண்மையல்ல. இரு துருவங்களைப் பற்றிக் கண்டுபிடிக்க முடியாத பல ரகசியங்கள் உள்ளதாக பல விஞ்ஞானிகள் கூறுகின்றனர். வட துருவத்தைச் சுற்றியுள்ள நிலப்பகுதியை ஆர்க்டிக் பிராந்தியம் (Arctic Region) என்றும் தென் துருவத்தைச் சுற்றியுள்ள நிலப்பகுதியை அண்டார்டிக் பிராந்தியம் அல்லது கண்டம் (Antarctic Region) என்றும் அழைப்பர்**

வட துருவத்தைச் சுற்றி, ஆர்க்டிக் சமுத்திரமும் வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பா போன்ற கண்டங்களும் சூழ்ந்துள்ளன. இத்துருவத்தில் ஒரு வருடத்தில் ஆறு மாதங்களுக்கு முழுமையாக சூரிய வெளிச்சமும் ஏனைய ஆறு மாதங்களுக்கு முழுமையாக இருள் சூழ்ந்தும் காணப்படும். இப்பகுதியில் வெப்பம் மிகக் குறைவாகவும் இருக்கும். இங்கு வெப்பம்-35°C இல் இருந்து-10°C வரை உள்ளது. இக்குறைந்த வெப்பநிலையிலும் சில பிராணிகளும் தாவரங்களும் உயிர் வாழ்கின்றன. இங்கு வாழும் மக்களை 'எஸ்கிமோக்கள்' என்றும் (Eskimos) சில பகுதிகளில் வாழ்வோரை 'லாப்பியர்' என்றும் அழைப்பர்.

தென் துருவத்தைச் சுற்றியுள்ள பகுதியை அண்டார்டிக் பகுதி என்பர். இப்பகுதியில் கடும் குளிர் காணப்படும். பூமியில் உள்ள மிக மிகக் குளிரான பகுதியும் இதுதான். அண்டார்டிகாவில் குளிர்காலத்தில் குளிர்நிலை-121°F-130°F வரை அதாவது, -85° செல்சியஸ்லிருந்து - 90° செல்சியஸ் வரை காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை என்பது உச்சக்கட்டக் கோடையில் 30°F அதாவது, 20° செல்சியஸ் அளவு காணப்படும். மேற்கு அண்டார்டிகாவை விடக் கிழக்கு அண்டார்டிகா குளிர் நிறைந்தது. கோடைகாலத்திலும் சராசரி வெப்பநிலை நீரின் உறைநிலைக்குக் கீழே காணப்படுகின்றது.

அத்துடன், நிலத்தில் வாழும் உயிரினங்கள் என அண்டார்டிகாவில் எதுவுமே கிடையாது. ஸீல், பென்குயின் (Penguin) போன்ற நில-நீர்வாழ் உயிரினங்களே அதிகம் காணப்படுகின்றன. அத்தோடு, கடல் பறவைகளும் சில பூச்சி வகைகளும் திமிங்கிலங்களும் அதிகளவில் காணப்படுகின்றன. அண்டார்டிகாவில் வாழும் உயிரினங்கள் அனைத்துக்கும் கடலே உணவளிக்கின்றது.





எஸ்கிமோ குடும்பம்

அண்டார்டிகா கண்டமும் ஆர்டிக் கண்டத்தை போலவே வருடத்தில் ஆறு மாதங்கள் முழுமையாக சூரிய வெளிச்சத்துடனும் மிகுதி ஆறு மாதங்கள் முழுமையாக இருள் சூழ்ந்தும் காணப்படும். இப்பகுதிகளில் லைக்கன்ஸ் (Lichens), மோசஸ் (Mosses), புற்கள் (Grasses) மற்றும் வேறு சில தாவரங்களும் காணப்படுகின்றன. பல விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வுகளின்படியும் இங்கு கிடைத்துள்ள சில புதைபொருள் (Fossils) உயிர்ச்சுவட்டு அமைப்புகள் பற்றிய ஆராய்ச்சியின்படியும் இப்பகுதி ஒரு காலத்தில் வெப்பமான பகுதியாக இருந்திருக்க வேண்டுமென்றும் இங்கு பல தாவரங்கள் வளர்ந்திருக்க வேண்டுமென்றும் கருதப்படுகின்றது.

அத்துடன், கிரேக்க சொல்லான 'அர்க்டோஸ்' என்பதில் இருந்து வந்ததுதான் ஆர்டிக்.ஆர்டிக் என்றால் 'கரடி' என்று அர்த்தமாகும். ஆர்டிக் என்பது ஆர்டிக் சமுத்திரம், கெனடா, ரஷ்யா ஆகிய நாடுகளின் சில பகுதிகளையும் அலாஸ்கா, கிரீன்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே, சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளின் சில பகுதிகளையும் உள்ளடங்கி இருக்கின்றது.

அண்டார்டிகாவில் 20 விமானத்தளங்கள் உள்ளன. 37 ஹெலிகொப்டர் தளங்கள் உள்ளன. ஆனால், துறைமுகம் எதுவும் இங்கில்லை. 1959 டிசம்பர் முதலாம் திகதி அண்டார்டிகா உடன்படிக்கை கைச்சாத்தானது. ஆர்ஜென்டீனா, அவுஸ்திரேலியா,பெல்ஜியம், சிலி, பிரான்ஸ், ஜப்பான், நியூஸிலாந்து, நோர்வே, தென் ஆபிரிக்கா, சோவியத் ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இந்த ஒப்பந்தம் 1961 ஜூன் 23 முதல் அமுலுக்கு வந்தது.

அந்த உடன்படிக்கையின்படி, எந்தவொரு நாட்டுக்கும் அண்டார்டிகா கண்டம் சொந்தமானதல்ல. விஞ்ஞான ஆராய்ச்சிக்காக அடுத்த முப்பது ஆண்டுகள் அனைத்து உலக நாடுகளுக்கும் அண்டார்டிகா சொந்தமானது என அந்த ஒப்பந்தம் கூறுகின்றது. அந்த உடன்படிக்கையை மிகச்சிறிய அளவில் மீறினாலும் எந்தவொரு நாட்டையும் அண்டார்டிகாவை விட்டு வெளியேற்ற முடியும்.



அண்டார்டிகா உடன்படிக்கைக்கு (Antarcia Treaty) உட்பட்டு, பல நாடுகள் அண்டார்டிகாவில் தங்கள் மையங்களை அமைத்து, ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

அத்துடன், வட துருவத்திற்குச் செல்வதை விட தென்துருவத்திற்குச் செல்வதே சுலபமானது. தென்துருவமானது நிலப்பரப்பின் மேல் அமைந்துள்ளதே இதற்குரிய காரணமாகும். சாதாரணமாக, அங்கு வாழ்வதற்குரிய சூழல் இல்லை என்பதால், அண்டார்டிகாவில் நிரந்தரமான குடிமக்கள் என எவரும் கிடையாது. எனினும், ஆராய்ச்சியாளர்கள், அவர்களின் உதவியாளர்கள் என குளிர்காலத்தில் அண்டார்டிகாவில் ஏறக்குறைய 1000 பேர் வரை மாத்திரமே தங்குவர். அதுவே கோடைகாலத்தில் 4000 பேர் வரை அதிகரிக்கும்.

-இரஞ்சித் ஜெயகர்

## விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3945
தி.லோகிதன்,
தரம்-03A,
புதுக்குளம் ம.வித்.,
புதுக்குளம்.


அங்.இல: 3946
எம்.ஐ.எம்.ரிபாத்,
தரம்-01,
மும்மானை மு.வித்.,
தம்பதெனிய.


அங்.இல: 3947
ச.மோனீஸ்வரன்,
தரம்-04A,
யா/கோ/றோ/க/த/க/பாட., கோண்டாவில்.


அங்.இல: 3948
முஹம்மது பௌசர் பாஸீல் ரஜா°°, தரம்-05A,
மட்/மீராபாலிகா மகா வித்., காத்தான்குடி.


அங்.இல: 3949
மு.ந.முஹம்மது பாதிஹ்,
தரம்-05,
தி/கிண்ணியா ம.கல்.,
கிண்ணியா.


அங்.இல: 3950
றொ.மெக்ஸ்மிலியன்,
தரம்-05,
மன்/மாவிலங்கேணி
R.C.T.M.S மாவிலங்கேணி.


அங்.இல: 3951
எம்.எம். ஹிராஸ் அஹமட்,
தரம்-05,
மட்/மாஞ்சோலை அல்/ஹிரா.வித்.,ஓட்டமாவடி.


அங்.இல: 3952
ஸ்ப்ரினா இல்யாஸ்,
தரம்-'(உயர்தரம்)',
அரபா தேசிய பாடசாலை.,
வெலிகம.


அங்.இல: 3953
யோகேந்திரன் தனுஸ்கர்,
தரம்-05,
கி/கிளிவெட்டி ம.வித்.,
கிளிவெட்டி.


அங்.இல: 3954
கே.துயிலன்,
தரம் 8G,
யாழ்/இந்துக் கல்.,
யாழ்ப்பாணம்.


அங்.இல: 3955
பி.சசிகரன், தரம்-08,
யா/பண்ணாகம்
மெய்கண்டான் வித்.,
சுழிபுரம்.


அங்.இல: 3956
யோகேந்திரன் திவாகர்,
தரம்-'(உயர்தரம்)',
மட்/சிவானந்தா கல்.,
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடதலவின்ன மடிகே இங்லிஷ் எகடமி பாலர் பாடசாலையின் கலை விழா அண்மையில் ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரியின் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது, மேடையேறிய மாணவர்களின் கலை நிகழ்வு களில் சிலவற்றைப் படங்களில் காணலாம்.

(படமும் தகவலும்: தலவின்ன நளீம்)

# ஓவியம் வரைவோம் - 33

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

நாம் கடந்த இதழ்களில் பல்வேறு முறைகளில் மனித உரு வங்களை வரைந்து பார்த்தோம். இனிக் காட்சிகளை வரைவதற் காக, மனிதனின் பல்வேறு செயற்பாடுகள், தோற்றங்களை வரைந்து பழகுவோம்.

பயிற்சி-1


## ஓடும் மாணவன்

* Aஎனும் படத்திற்கமைய ரேகைகளால் மனித உருவத்தின் அடிப்படையை வரைந்து கொள்வோம்.
* அந்த ரேகைகளுக்கு சமாந்தரமாக உருவத்தை அமைப்பதற்கான ரேகைகளை Bபடத்தில் காட்டியவாறு வரைந்து கொள்ளுங்கள்.
* இறுதியாக C படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு வரைந்த படத்தைப் பூரணப்படுத்துங்கள். அதன்படி தலை, முகம், விரல்கள் உட்பட சகல உடற்பாகங்களையும் உடை, காலுக்குப் பாதணி போன்றவற்றையும் வரைந்து பூரணப்படுத்துங்கள்.

ஓடும் மாணவன்:




விவசாயி:




பயிற்சி-2

## விவசாயி

பயிற்சி 1 இல் தரப்பட்டுள்ள A,B,C விளக்கங்களின் அடிப்படையில் இந்த உருவையும் வரைந்து பயிற்சி பெறுங்கள்.

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



கொழும்பு-6, சுவர்ணா வீதியைச் சேர்ந்த ஆனந்தராஜா-விஜயலக்ஷ்மி தம்பதியரின் செல்வப் புதல்வன் ஸ்ரீ பிரபுசங்கர், 9.01.2011 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் மாணிக்கப் பிள்ளையார் அருள்பெற்று, நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.




கலீல் றகுமான்,தரம்-11, பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்., மட்டக்களப்பு.



எஃப் இஸ்ரா, தரம்-4, அல்-அஸ்ஹர் மு.ம.வித்., வெள்ளை மணல்.



எம்.மில்ஹான், தரம்-12 (கலை), பாணந்துறை.



எஃப் ஸுஹா, தரம்-9, அல்-அகீல் மு.ம.வித்., கொடியாக்கும்புர.



பா.சுகிர்தன், தரம்-7, யாழ்.மத்திய கல்., யாழ்ப்பாணம்.



தே.கிருபானந், தரம்-5, சைவ சன்மார்க்க வித்., ஏழாலை மேற்கு.

## கைவண்ணங்கள்




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு




ரஸீன் ரிம்சான், தரம்-3,



ரெ.வினுஜா, பூண்டுலோயா த.ம.வித்., பூண்டுலோயா.



எஃப் ருஷ்மா, தரம்-7, சென்.ஜோஸப் த.ம.வித்., மஸ்கெலியா.



கே.திலீபன், தரம்-11, புனித சில்வெஸ்டர் கல்., கண்டி.



பா.ரசிக்கா, தரம்-6, மலைமகள் இ.ம.கல்., கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அரியாலையூர் சி.சிவதாசன்

அந்த இளைஞன் இறந்தே விட்டான். வானத்தில் பயங்கர மான மின்னலோடு இடி முழங் கியது. பேரிரைச்சலோடு மழை சோவெனப் பெய்தது. அந்த மழையிலும் அங்கு அட்டகாசச் சிரிப்பொலி அடங்கவில்லை. சிரித்துக்கொண்டே அந்தப் பேய் உருவம் அந்தக் கரடு முரடான மண்பாதை வழியே சென்று வயல் வெளியில் இறங்கி விரைந்து சென்று கொண்டிருந்தது. மறு நாட் காலை வேப்பமரத்தடிப் பகுதி யைச் சுற்றி ஏகப்பட்ட மக்கள் கூடி நின்றார்கள். அங்கே அந்த இளைஞனின் உயிரற்ற உடல் மழையில் நனைந்து கிடந்தது.

"இது பேயின் வேலைதான் பேய் அடித்தபடியால்தான் வாயிலிருந்து இரத்தம் வழிந்தி ருக்கிறது" எனக் கூறுவோரும். "இது காளியம்மனின் திருவிளையாடல் ஐயரைத் துரத்தியபோதும் சாகடிக்காது இளைஞனைச் சாகடித்திருக்கிறது. அம்மனுக்குப் பொங்கிவிட்ட போதும் ஏதோ குறை இருக்கி றது" எனக் கதை அளப்போரும் ஒரு புறமிருக்க இளைஞனின் உடல் அவன் வீட்டிற்கு உறவி னர்களால் எடுத்துச் செல்லப் பட்டது. இளைஞனின் இறுதிக் கடன்கள் முடிந்து நாட்கள் பல கடந்தன. வேப்பங்கேணிக் கிராமமக்கள் மாலையானதும் எல்லைப்புறமான வேப்பங் கேணியடிக்கு வர அஞ்சினார் . அனைவரையும் பயம் ஆட்கொண்டது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் களவு களும் இடம்பெற்றன. வேப்பமரத்தடியில் பேய் ஒருபுறம். திட்டமிட்டு நடத்தப்படும் களவுகள் மறுபுறம். வேப்பங் கேணிக் கிராமமக்கள் செய்வதறியாது திகைத்துப் போயிருந்த வேளை கிராமத் தலைவர் மாணிக்கம் பிள்ளையின் வீட்டி லும் பெரிய அளவில் பணம். நகைகள் கொள்ளை போயின. பேயின் அட்டகா சம் நடைபெற்று வரும் இந்தவேளையில் திருட்டுகளில் ஈடுபட்டு வருபவர்கள் யார்? என்ற தகவலும் புரியாத புதிரா கவே இருந்தது. மாணிக்கம்பிள்ளை யால் இதுபற்றி அறிந்துகொள்ள முடிய வில்லை. இதனால், அவர் ஒரு தீர்மா னத்திற்கு வந்தார். கிராமத்தில் வாழும் குடும்பத்தலைவர்கள், பெரியவர்களை எல்லாம் ஒன்று கூடும்படி அறிவித்த லும் விடுத்தார். எல்லோரும் குறிப்பிட்ட நாளில் ஒன்று கூடினர். அவர்கள் ஒன்று கூடி. களவுகள் பற்றியும். பேயின் அட்ட காசம் பற்றியும் பேசிக்கொண்டிருந்த போது எதிர்பாராத தகவல் ஒன்று கிடைத்தது.

> **பெரியதம்பி என்பவர் நீண்ட முறுக்கு மீசை, தலையில் கொட்டைப்பாக்களவு குடும்பி, பருத்த வயிறு, பார்ப்போரைப் பயங்கொள்ளச் செய்யும் உருவம். இவர் மாந்திரீகத்தில் கைதேர்ந்தவர். இவரைக் கண்டால் பேய்களே நடுங்கி அழிந்துவிடுமாம். பேய், பிசாசுகளைத் துரத்தி அடிக்கும் வல்லமையும் கொண்டவராம்**

பெரியதம்பி என்பவர் நீண்ட முறுக்கு மீசை, தலையில் கொட் டைப்பாக்களவு குடும்பி, பருத்த வயிறு, பார்ப்போ ரைப் பயங் கொள்ளச் செய் யும் உருவம். இவர் மாந்திரீகத்தில் கைதேர்ந்தவர். இவரைக் கண்டால் பேய்களே நடுங்கி அழிந்து விடுமாம். பேய், பிசாசுகளைத் துரத்தி அடிக்கும் வல்லமை கொண்டவராம்.

அயற் கிராமமொன்றில் வசிக்கும் இவரது காதுக்கும் வேப்பமரத்துப் பேய் பற்றிய செய்தி எட்டியது. அவர் கைப்பட எழுதிய கடிதமே எதிர்பா ராத விதமாக அக் கூட்டத்தில் கிடைத்தது. அந்தக் கடிதத்தில் வேப்பங்கேணிக் கிராமத் தலை மைக்காரருக்கு"..... ஐயா!...... என்னால் தங்கள் கிராமத்தை ஆட்டிப் படைக்கும் பேயைத் துரத்த முடியும். தங்கள் பதிலுக்காகக் காத்திருக்கிறேன். இப்படிக்கு மந்திரவாதி பெரியதம்பி" என்றிருந்தது. இச் செய் தியை கிராமத் தலைமைக்காரர் மாணிக் கம்பிள்ளை கூட்டத்தினருக்குத் தெரி வித்தபோது........ கூடியிருந்தோர் கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தனர். பேயின் ஆட்டத்தைத் தடுப்பதற்கு மிகவும் பொருத்தமானவர் பெரியதம்பிதான். அவரே முன்வந்துள்ளமையானது தங்கள் கிராமத்தின் விடிவிற்கு வழி வகுக்கும் என அவர்கள் நம்பினார்கள். அவரின் வருகையைத் துரிதப்படுத்து மாறு அவர்கள் கிராமத்தலைவர் மாணிக்கம்பிள்ளையை வேண்டி னார்கள். மாணிக்கம்பிள்ளையும் "முதலில் பேயின் பிரச்சினைக்கு முடிவு கட்டுவோம். நீங்கள் எல்லோரும் மாந்திரீகரை அழைக்க விரும்புவதால் வந்தவரிடமே தகவல் அனுப்புகிறேன்" என்றார். தகவல் மாந்திரீகர் பெரியதம்பிக்கு அனுப்பி வைக் கப்பட்டது. அன்று ஞாயிற்றுக்கிழமை பெரியதம்பி மாந்திரீகரின் வருகைக்காக வேப்பங்கேணிக் கிராமமக்கள் அனைவரும் காத்திருந்தார்கள். ஆனால் பெரியதம்பியோ வரவில்லை. மாலையாகிக் கொண்டிருந்தது. கிராமமக்கள் ஏமாற்றம் அடைந்தார்கள். மேலும் அங்கு நிற்க முடியாமல் அவர்கள் மெல்ல, மெல்ல தத்தமது வீடுகளை நோக்கி நடக்கலானார்கள்.

மாந்திரீகர் பெரியதம்பி எங்களை ஏமாற்றிவிட்டாரோ? அல்லது பயந்து போய் விட்டாரோ? என அக்கிராம மக்கள் பலவாறும் பேசிக்கொண்டார்கள். வேப்பமரத்தடிப் பேயின் அட்டகாசத்தை எவராலும் தடுக்க முடியாது என்ற முடிவிற்கு அவர்கள் வந்துவிட்டார்கள். ஆனால், எதிலும் ஆச்சரியத்தை உண்டுபண்ணித் தன் திறமையை வெளிப்படுத்தும் மாந்திரீகர் பெரியதம்பி வேப்பமரத்தடிப் பேயை ஓட்டித் துரத்துவதிலும் ஆச்சரியத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற முடிவோடு இருந்தார் என்பது யாருக்குத் தெரியும்?....... இருள் சூழ்ந்த வேளை தனது கிராமத்திலிருந்து வேப்பங்கேணிக் கிராமத்தை நோக்கித் தன் உதவியாளனோடு மாட்டு வண்டிலில் வந்து கொண்டிருந்தார் மாந்திரீகர் பெரியதம்பி.



## எதிர்பாராத செய்தி

(தொடரும்)

## உண்மை நட்பு

முன்னொரு காலத்தில் மகத நாட்டு அரண்மனையில் பட்டத்து யானை ஒன்று இருந்தது. அதன்மீது அமர்ந்து செல்வதைப் பெருமையாக நினைத்தான் அரசன். அதற்கு எந்தக் குறையும் இல்லாமல் பார்த்துக்கொண்டான். ஒருநாள் அரண்மனை லாயத்தில் அந்த யானை உணவு உண்டு கொண்டிருந்தது. அப்போது, பசியால் வாடிய நாய் ஒன்று அங்கே வந்தது. அது எலும்பும் தோலுமாகப் பார்ப்ப தற்கே பரிதாபமாக இருந்தது. அது யானை லாயத்தின் அருகே உள்ள அரண்மனை சமையலறையின் பக்கம் சிந்தியிருந்த உணவை பரபரப்புடன் உண்டது. இதைப் பார்த்து இரக்கப் பட்ட யானை அதற்கு மேலும் அதிக உணவுள்ள இடத்தைக் காட்டியது. நாயும் மகிழ்ச்சியுடன் அவற்றை உண்டது. அதன் பின்னர் அது நாள்தோறும் அங்கே வரத் தொடங்கியது.

நாளாக நாளாக அவை இரண்டும் நெருங்கிய நண்பர்கள் ஆயின. எப்போதும் இணைபிரியாமல் இருந்தன. நாள்தோறும் அரண்மனையில் அதிகளவு உணவை உண்டதால் அந்த நாய் கொழுத்துப் பருத்தது. அத்துடன், அழகாகவும் காட்சி அளித்தது. ஒருநாள் அங்கே வந்த செல்வந்த ஒருவர் அந்த நாயைப் பார்த்தார். அதைத் தன் வீட்டில் வளர்க்க விரும்பினார்.

பாகனிடம் அவர், "இந்த நாய்க்கு விலையாக நூறு பணம் தருகிறேன். நாயை எனக்குத் தா" என்றார்.

பணத்தாசை கொண்ட அந்தப் பாகன் அந்த நாயை அவருக்கு விற்று விட்டான். தன் நண்பனை இழந்த அந்த யானை உணவு உண்ணாமல் எப்போதும் கண்ணீர் வடித்த படியே இருந்தது. அதை அறிந்த அரசன் அரண்மனை மருத்து வர்களை அனுப்பி யானையை சோதிக்கச் சொன்னான். பட்டத்து யானையைச் சோதித்த அவர்கள் அரசனிடம்.

" அரசே! பட்டத்து யானைக்கு எந்த நோயும் இல்லை. அது ஏன் உணவு உண்ணாமல் கண்ணீர் வடிக்கிறது என்பதுதான் புரியவில்லை!" என்றனர்.

என்ன செய்வது என்று குழம் பிய அரசன் அமைச்சரை அழைத் தான். "பட்டத்து யானைக்கு எந்த நோயும் இல்லை என்று மருத்துவர்கள் கூறு கின்றனர். நீங்கள்தான் எப்படியாவது அதனைக் குணப்படுத்த வேண்டும்!" என்றான்.

அறிவு நிறைந்த அந்த அமைச்சர் லாயத்திற்கு வந்தார். உடல் மெலிந்து கண்ணீர் வடித்தபடி இருந்த யானையைப் பார்த்தார். அதன் முன் வைக்கப்பட்டிருந்த உணவுகள் அப்ப டியே இருந்தன,' "இந்த யானைக்கு ஏதோ துன்பம் நிகழ்ந்துள்ளது. கண்டிப்பாக அது பாகனுக் குத் தெரிந்திருக்கும்,' என்று நினைத்தார்.

பாகனை அழைத்த அவர், " அண்மையில் இந்த யானை யைத் துன்பப் படுத்தும் நிகழ்ச்சி ஒன்று இங்கு நடந்துள்ளது. அது உனக்குத் தெரிந்திருக் கும். அது என்ன என்ற உண்மையைச் சொன்னால் நீ உயிர் பிழைப்பாய்," என்று மிரட்டினார்.

வேறு வழியில்லாத அவன், "இங்கே கொழு கொழுவென்று நாய் ஒன்று இருந்தது. அதுவும் இந்த யானையும் எப்போதும் ஒன்றாகவே இருந்தன. அந்த நாயைச் செல்வந்தர் ஒருவர் விலைக்குக் கேட்டார். நானும் அதை விற்றுவிட்டேன். அன்றிலிருந்து இந்த யானை எதையும் உண்பதில்லை. கண்ணீர் வடித்தபடியே உள்ளது!" என்றான்.

"அந்த நாயை மீண்டும் இங்கே கொண்டுவா" என்றார் அமைச்சர். மறுநாள் பாகன் அந்த நாயுடன் அங்கே வந்தான். படுத்திருந்த யானை தன் நண்பனைப் பார்த்ததும் எழுந்தது. அந்த நாயும் வாலை ஆட்டியபடியே யானையின் அருகே ஓடியது. மகிழ்ச்சியாகக் குரைத்தது. யானை அதைத் தன் துதிக்கையால் தடவிக் கொடுத்தது.



உணர்ச்சி மிகுந்த இந்தக் காட்சியைப் பார்த்து உள்ளம் நெகிழ்ந்தார் அமைச்சர். விலங்குகளுக்குள் இப்படி ஒரு நட்பா என்று வியப்படைந்தார். அரசனைச் சந்தித்த அவர் நடந்தது எல்லாவற் றையும் கூறினார்.

"சில நாட்களில் பட்டத்து யானை பழைய நிலையை அடைந்து விடும்!" என்றார். அவர் சொன்னது போலவே, அந்த யானையும் தனது பழைய நிலையை அடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் கமல், அனில், அம்மா, தோழர்கள் ஆகியோருக்கு இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.



අනිල්: ආ... කමල් එන්න... එන්න.
ஆ.... கமல் என்ன... என்ன.
அனில்: ஆ... கமல் வாருங்கள்... வாருங்கள்.

ගේ හොයාගන්න අමාරුවුණාද?
கே ஹொயாகன்ன அமாருவுனாத?
வீட்டைக் கண்டுபிடிக்க சிரமப்பட்டீர்களா?

කමල්: නැහැ අනිල්, මම හන්දියේ කඩේ මුදලාලිගෙන් අහගත්තා.
நெஹெ அனில், மம ஹந்தியே கடே முதலாளிகென் அஹகத்தா.
கமல்: இல்லை அனில், நான் சந்தியிலுள்ள கடை முதலாளியிடம் கேட்டுத்தெரிந்து கொண்டேன்.

අනිල්: ඇවිත් බලන්න, පරණ යාලුවෝ ඉන්නවා.
எவித் பலன்ன, பரண யாலுவோ இன்னவா.
அனில்: வந்து பாருங்கள், பழைய தோழர்கள் இருக்கிறார்கள்.



කමල්: ඒ කවුද?
ஏ கவுத?
கமல்: அது யார்?

අනිල්: කුමාර්, සුනිල්, සුරේෂ් මේ කවුද බලන්න.
குமார், அனில், சுரேஷ் மே கவுத பலன்ன.
அனில்: குமார், சுனில், சுரேஷ் இது யாரென்று பாருங்கள்.

යාළුවෝ: ආ... කමල් දැක්ක කල්. ඉතින් කොහොමද?
ஆ.... கமல் தெக்க கல். இதின் கொஹொமத?
தோழர்கள்: ஆ..... கமல் அதிக நாளைக்குப் பிறகு. எப்படி சுகம்?

කමල්: හොඳයි. හමුවීම ගැන හරි සතුටුයි.
ஹொந்தய். ஹமுவீம கென ஹறி சதுடுய்.
கமல்: நலம். சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி.

අම්මා: පරණ යාලුවෝ අද හමුවෙලා වගේ.
பரண யாலுவோ அத ஹமுவெலா வகே.
அம்மா: பழைய தோழர்கள் இன்று சந்தித்திருக்கிறீர்கள் போலும்.

කමල්: ඔව් අම්මේ අවුරුදු ගණනකින් හමුවුණේ.
ஒவ் அம்மே அவுருது கணனகின் ஹமுவுணே.
கமல்: ஆம் அம்மா பல வருடங்களுக்குப் பின் சந்தித்தோம்.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

**உதாரணம்:** வீட்டைக் கண்டுபிடிக்க சிரமப்பட்டீர்களா?
ගේ හොයාගන්න අමාරුවුණාද?

i. கடை முதலாளியிடம் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.
.................................................

ii. பழைய தோழர்கள் இருக்கிறார்கள்.
.................................................

iii. பல வருடங்களுக்குப் பின் சந்தித்தோம்.
.................................................






was எனும் இறந்தகால துணை வினைச்சொல்லை (Past Tense Auxiliary verb) நிகழ்கால எச்சவினையுடன் (Present Participle) அதாவது **'ing'** சேர்ந்த வினைச் சொல்லுடன் சேர்த்து, உருவாக்கப்படும் வாக்கியம், இறந்தகால தொடர் வாக்கியம் (Past Continuous Tense) ஆகும் என முன்னைய பாடத்தில் கற்றோம் அல்லவா?

✱ இனி புதிய பாடத்துக்குள் நுழைவோம். அதாவது, **was** எனும் இறந்தகால துணை வினைச்சொல்லை, இறந்தகால எச்சவினையுடன் (Past Participle) சேர்த்து, உருவாக்கப்படும் வாக்கியம், செயற்பாட்டு வினை (Passive Voice) வாக்கியமாக அமைகின்றது.

✱ இவ்வாறு அமைகின்ற செயற்பாட்டு வினை (Passive voice) வாக்கியங்கள், இறந்தகால தனி வாக்கியங்களில் (Past Simple Tense) காணப்படுகின்ற, செய்வினை (Active Voice) வாக்கியங்களுக்குரிய, செயற்பாட்டு வினை (Passive Voice) வாக்கியங்கள் ஆகும் என்பதை, நாம் முக்கியமாக கவனத்திற் கொள்ள வேண்டும். உதாரணங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) நான் அந்தப் புத்தகத்தைக் கொடுத்தேன்.
I gave that book.
(இறந்தகால தனி வாக்கியம்- செய்வினை)
(Active Voice of the Past Simple Tense)

**குறிப்பு:-** மேற்படி செய்வினை (Active Voice) வாக்கியத்தை, செயற்பாட்டு வினை (PassiveVoice) வாக்கியமாக மாற்றியமைக்கும்போது, அவ்வாக்கியம் பின்வருமாறு அமைந்திருக்கின்றது.

(ஆ) அந்தப் புத்தகம் என்னால் கொடுக்கப்பட்டது.
That book was given by me.
(இறந்தகால தனி வாக்கியம்- செயற்பாட்டு வினை)
(Passive Voice of the Past Simple Tense)

**விளக்கம்:-** மேற்படி செயற்பாட்டு வினை வாக்கியத்தில், 'was' எனும் இறந்தகால துணை வினைச்சொல், given எனும் இறந்தகால எச்ச வினையுடன் ஒன்று சேர்ந்து, ஒரு கூட்டு வினைச்சொல்லாக (Compound Verb) விளங்குகின்றது என்பதை, நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

✱ மேலும், ஒரு கூட்டு வினைச்சொல்லில் இடம்பெறுகின்ற ஒவ்வொரு சொல்லுக்கும், தனித்தனியான அர்த்தம் பெறப்படுவதில்லை என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அதன் அடிப்படையில், இங்கே செயற்பாட்டு வினை வாக்கியத்தில் (Passive Voice), காணப்படுகின்ற **'was given'** எனும் கூட்டு வினைச்சொல்லில் அங்கம் வகிக்கின்ற, **'was'** எனும் துணை வினைச் சொல்லுக்கு, தனியான அர்த்தம் கொள்ளப்படுவதில்லை.இத்தகைய சந்தர்ப்பங்களில், **was** என்பது உதவி புரியும் வினைச் சொல் (Helping Verb) என்றே கருதப்பட வேண்டும். இதுவே ஆங்கில இலக்கண மரபு விதி ஆகும்.

✱ அதாவது, கூட்டு வினைச்சொல்லை உருவாக்குவதற்கு, **'was'** உதவி புரிகின்றது அவ்வளவுதான். இங்கே, **'was given'** எனும் இரண்டு வினைச் சொற்களும், 'கொடுக்கப்பட்டது' எனும் ஓர் அர்த்தத்தை மாத்திரமே தருகின்றன.

✱ மேலும் உதாரணங்களை அவதானிப்போம்.

(இ) நீ அந்த ஜன்னலை உடைத்தாய்.
You broke that window.
(இறந்தகால தனி வாக்கியம்- செய்வினை)
(Active Voice of the Past Simple Tense)

(ஈ) அந்த ஜன்னல் உன்னால் உடைக்கப்பட்டது.
That window was broken by you.
(இறந்தகால தனி வாக்கியம்- செயற்பாட்டு வினை)
(Passive Voice of the Past Simple Tense)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் அரசாங்கம் அந்தரத்தில்



பாகிஸ்தான் கூட்டணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற இரண்டாவது பிரதான கட்சியான 'முட்டாஹிடா துவாமி' என்ற கட்சி அரசாங்கத்திற்கான தனது ஆதரவை விலக்கிக் கொள்வதாக அறிவித்துள்ளதையடுத்து பாகிஸ்தான் அரசாங்கம் தனது பெரும்பான்மைப் பலத்தை இழந்துள்ளது.



342 ஆசனங்களைக் கொண்ட பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியில் அங்கம் வகித்த 'முட்டாஹிடா' கட்சியின் 25 உறுப்பினர்கள் தமது ஆதரவை விலக்கிக் கொண்டதையடுத்து அரசாங்கத்தின் பலம் 60 ஆக குறைவடைந்துள்ளது. இதனால், பாகிஸ்தான் பிரதமர் யுசெடிஃப் ராஸா கிலானியின் அரசாங்கம் கவிழக்கூடிய வாய்ப்புள்ளதாக கருதப்படுகின்றது.

அரசாங்கத்திலிருந்து வெளியேறிய மேற்படி கட்சி தாம் எதிர்க்கட்சியுடன் கைகோர்த்துக் கொள்ளப் போவதாகவும் தெரிவித்துள்ளது .

# பிரேஸிலின் புதிய ஜனாதிபதி பதவியேற்பு



பிரேஸில் நாட்டின் புதிய ஜனாதிபதியாக டில்மா ரொசேவ் பதவியேற்றுள்ளார். பிரேஸிலின் முதலாவது பெண் ஜனாதிபதி இவரே என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை ஜனாதிபதியாகப் பதவி வகித்த இனாஸியோ லூலாடி சில்வாவின் பதவிக்காலம் முடிவடைந்ததை அடுத்தே டில்மா அதிபர் பதவியைப் பெற்றுள்ளார். லூலாடி சில்வாவின் கொள்கைகளையே தாமும் முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ள டில்மா தனது பதவியேற்பானது அனைத்துப் பெண்களுக்கும் பெருமை சேர்ப்பதாக அமைந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இவரது புதிய அமைச்சரவையில் 37 அமைச்சர்கள் உள்ளனர். இதில் 9 அமைச்சர்கள் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வறுமை ஒழிப்பு, வீடில்லாதோருக்கு வீடு வழங்கல் ஆகிய பிரச்சினைகளுக்கு தாம் முன்னுரிமை வழங்கவுள்ளதாகவும் டில்மா மேலும் குறிப்பிட்டுள்ளார்.





அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...


# 'பொனியெம்' பாடகர் திடீர் மரணம்



1980 ஆம் ஆண்டுகளிலிருந்து இன்று வரை உலகப் புகழ் 'பெற்ற' பொனியெம் (Boney m) இசைக் குழுவில் அங்கம் வகித்து வந்த பாடகர் பொபி ஃபெரல் சில தினங்களுக்கு முன்னர் மரணமானார்.

இசை நிகழ்ச்சியொன்றிற்காக ரஷ்யாவிற்கு விஜயம் செய்திருந்தபோது, ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாகவே இவர் மரணமானார். மரணமாகும்போது, இவரது வயது 61.

1980 ஆம் ஆண்டுகளில் சிறுவர் உட்பட, பெரியோர் வரை மிகவும் விரும்பி ரசித்த இசைக் கலைஞராக இவர் திகழ்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 290

**கேள்வி:** பிரேஸில் அரசாங்கத்தின் புதிய அமைச்சரவையில் எத்தனை பெண் அமைச்சர்கள் உள்ளனர்?

சரியான விடை.................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 290,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 288 இன் சரியான விடை: யுரேனியம்**

**பரிசு பெறுவோர்**

ந.நந்துஷன்,
33, யமுனாரி ஒழுங்கை, செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

அ. சம்ஹான்,
101/3, அல் ஷுஹதா வீதி,
காத்தான்குடி - 01.

ஃபாத்திமா ஷுக்ரா,
99A, துணுவில்ல வீதி, கஸ்ஹின்ன,
அக்குறணை.

# உலகிலேயே நீளமான கடற்பாலம் சீனாவில்

உலகிலேயே கடற்பரப்பில் மிகவும் நீளமான பாலமொன்றை சீனா அமைத்துள்ளது.

கடலுக்கு மேலாக அமைக்கப்பட்டிருக்கும் இந்தப் பாலத்தின் பெயர் 'கிங்டோ ஹய்வன்' என்பதாகும். இதன் நீளம் 26.4 மைல்கள். 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தப் பாலத்தைக் கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. நான்கு வருடங்களின் பின்னர் கடந்த டிசம்பரில் இதன் பணிகள் முடிவாகின. 5.5 பில்லியன் ஸ்டேலிங் பவுண்ஸ்கள் இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு செலவிடப்பட்டுள்ளது.



குறிப்பிட்ட பாலத்தில் 6 அதிவேகப் பாதைகள் (High way) அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பூமி அதிர்ச்சி, கப்பல்களின் அதிர்வு ஆகியவற்றிற்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையிலேயே இந்தப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

# தெரிந்து கொள்வோம்



✱ ரோம் நகரம் எப்போது? யாரால் உருவாக்கப்பட்டது?

**கி.பி.738 இல் ரோமியூலஸ் மன்னனால்**



✱ கொபர் சல்பெட்டிற்கு சாதாரணமாக வழங்கப்படும் பெயர் என்ன?

**பல்மாணிக்கம்**



✱ 'இரும்புச் சீமாட்டி' என அழைக்கப்பட்டவர் முன்னாள் பிரித்தானிய பிரதமர் மார்க்கிரேட் தட்சர் அம்மையாராவார். அந்தவகையில், 'இரும்பு மனிதர்' என அழைக்கப்பட்டவர் யார்?

**பிஸ்மார்க்**

✱ சர்வதேச திகதிக் கோட்டை ஒருவர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கித் திங்கட்கிழமை (கடந்த நாள்) சென்றால் அவர் எந்த நாளைச் சந்திப்பார்?

**I திங்கட்கிழமை**
**II ஞாயிற்றுக்கிழமை**
**III செவ்வாய்க்கிழமை**



✱ சாதாரண பெண் ஒருவரை மணப்பதற்காக, பதவி துறந்த பிரித்தானிய மன்னனின் பெயர் என்ன?

**5 ஆவது ஜோர்ஜ் மன்னன்**



✱ இஸ்லாத்தின் வேத நூல் குர்ஆன், அந்தவகையில் கிறிஸ்தவ, இந்துசமய வேத நூல்கள் எவை?

**கிறிஸ்தவம்-பைபிள் (சுவிஷேசம்)**
**இந்து - பகவத்கீதை**




✱ The villege of the Jungle என்ற நாவல் சிங்கள மொழியில் 'பத்தேகம' என்ற பெயரில் மொழி பெயர்க்கப்பட்டது. இதன் பின்னர் அது திரைப் படமாக்கப்பட்டது. இந்த நாவலை ஆங்கிலத்தில் எழுதியவரின் பெயர் என்ன?

**'லேனால்டோ'**



✱ மேபில் (Maple) மரத்தின் ஒரு இலை ஒரு நாட்டின் தேசிய கொடியில் இடம்பெற்றுள்ளது. அந்த நாட்டின் பெயர் என்ன?

**கெனடா**



✱ எமது நாட்டில் கடந்த 41 ஆண்டுகளுக்கு மேல்வெளிவரும் தமிழ் சஞ்சிகை எது? அதன் ஆசிரியரின் பெயர் என்ன?

**மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா**

✱ ஒரு இராணித் தேனியின் வாழ்நாள் 5-4 வருடங்கள். அது முட்டையிடும் பருவத்தில் ஒரு நாளைக்கு எத்தனை முட்டைகளை இடும்?

**ஒரு நாளைக்கு சுமார் 2,000 முட்டைகள் வரை இடும்**



✱ இலங்கை கிரிக்கெட் அணி எப்போது உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டது? அப்போது அணியின் தலைவராக இருந்தவர் யார்?

**- 1996 இல். அர்ஜுன ரணதுங்க அணியின் தலைவராக இருந்தார்.**



✱ ஈரான் நாட்டைச் சேர்ந்த முஸ்லிம் பெண்மணி ஒருவர் நோபல் பரிசு பெற்றார் அவர் யார்?

**சிரின்-கொதி**



✱ அணிசேரா நாடுகளின் மகாநாடு முதன்முதலில் இலங்கையில் எப்போது நடைபெற்றது?

**1976 இல், பிரதமர் சிறிமாவோ ஆர்.டி. பண்டாரநாயக்காவின் ஆட்சியின் போது.**

'ஆஸ்ரோனாட்' என்றால் எதனைக் குறிக்கின்றது?

**இது ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி வீரர்களைக் குறிக்கின்றது.**

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மைதானங்கள் தயாராம்

உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கையில் நடைபெறவுள்ள போட்டிகளுக்கான மைதானங்களின் ஆயத்தப் பணிகள் நிறைவடையும் நிலையில் இருப்பதாக இலங்கையின் இடைக்கால கிரிக்கெட் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

போட்டிகள் நடைபெறவுள்ள மைதானங்களைப் பரிசோதித்து தகுதி அறிக்கையினை வழங்குவதற்கான ஐ.சி.சி.யின் விசேட குழுவொன்று ஜனவரி மாதம் 15 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி குழுவின் தகுதி அறிக்கையின் பின்னரே, குறித்த மைதானத்தில் போட்டிகள் நடத்தப்படுமா? இல்லையா? என்பது உறுதியாகத் தெரியவரும்.

# சஹிர்கானிடம் நுணுக்கம் கற்றேன்



இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சஹிர் கானிடமே பந்து வீச்சில் புதிய நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டதாக இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் பீட்டர் என்டசன் தெரிவித்துள்ளார்.

'ஏஷஸ்' தொடரில் இங்கிலாந்து அணி சிறப்பாக வெற்றிகளை ஈட்டியிருந்தமைக்கு அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளரான பீட்டர் அன்டர்சன் முக்கிய பங்கினை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இத்தகைய பின்னணியிலேயே, என்டர்சன் தனது கருத்துக்களை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், இது குறித்து தெரிவித்துள்ள அவர்; 2008 ஆம் ஆண்டில் இந்தியாவில் இங்கிலாந்து அணி கிரிக்கெட் சுற்றுலா மேற்கொண்டிருந்த போதே, சஹிர் கானிடம் பந்து வீச்சு நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ளச் சந்தர்ப்பம் கிட்டியதாகவும், பந்தினை 'சுவிங்' செய்வதில் அவர் சிறந்த தந்திரோபாயங்களை கையாள்வதாகவும் துடுப்பாட்ட வீரர்கள் பந்தினை அனுமானிக்க முடியாத வகையில் பந்தினை வீசுவதில் அவர் மிக[illegible]ம் தேர்ந்தவர். ஆகையினால்தான் அவரிடம் பல நுணுக்கங்களைக் கற்றுக்கொள்ள ஆர்வம் கொண்டிருந்ததாகவும் குறிப்பிடுகின்றார்.

தற்போதைய தனது வெற்றிகளில் சஹிர்கானிடம் கற்றவை உதவிகரமாக இருக்கின்றதாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

# சிறந்த ஒரு நாள் போட்டிகள் தெரிவு...



சர்வதேச ஒரு நாள் போட்டிகள் அறிமுகமாகி 40 வருடங்கள் பூர்த்தியாவதையொட்டி சிறந்த ஒரு நாள் போட்டிகளை ரசிகர்கள் தெரிவு செய்துள்ளனர். சர்வதேச கிரிக்கெட் சபையின் இணையத்தளத்தினூடாக, ரசிகர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வாக்களிப்பு வாய்ப்பின்படியே இத் தெரிவு நடைபெற்றுள்ளது.

இதற்கமைய, கடந்த 40 வருட காலத்தில் நடைபெற்ற போட்டிகளில் சிறந்த பத்துப் போட்டிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சிறந்த 10 போட்டிகள் வருமாறு;

| காலம் | நாடுகள் | வெற்றி |
|---|---|---|
| 1975 ஜூன் 17 | மே.இ.தீவு/அவுஸ். | மே.இ.தீவுகள் |
| 1983 ஜூன் 25 | இந்தியா/மே.இ.தீவுகள் | இந்தியா |
| 1986 ஏப்ரல் 18 | பாகிஸ்தான்/இந்தியா | பாகிஸ்தான் |
| 1987 ஜனவரி 22 | இங்கி./அவுஸ். | இங்கிலாந்து |
| 1996 ஜனவரி 12 | அவுஸ்/மே.இ.தீவு | அவுஸ்திரேலியா |
| 1998 ஜூன் 17 | அவுஸ்/தெ.ஆபிரிக்கா | வெற்றி தோல்வி இல்லை |
| 1999 ஒக் 15 | பாகிஸ்தான்/தெ.ஆபிரி | வெற்றி தோல்வியில்லை |
| 2004 மார் 13 | இந்தியா/பாகிஸ். | இந்தியா |
| 2005 ஜூன் 18 | பங்களாதேஷ்/அவுஸ். | பங்களாதேஷ் |
| 2006 மார்ச் 12 | தெ.ஆபிரிக்/அவுஸ். | தெ.ஆபிரிக்கா |



# மாலிக், அக்மால் அணியில் இல்லை

பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ளவுள்ள பாகிஸ்தான் அணியில் சொயிப் மாலிக், கம்ரன் அக்மால் ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்படாது என்று தெரியவருகின்ற[illegible]

ஏற்கனவே பாகிஸ்தான் அ[illegible]யின்மீது சூதாட்டப் புகார்கள் எழுந்துள்ள நிலையில் அந்நாட்டின் கிரிக்கெட் சபை, தமது நாட்டின் கிரிக்கெட் வீரர்களிடம் அவர்களது வங்கிக் கணக்கு விபரங்களை முன்வைக்குமாறு கேட்டிருத்தது. எனினும், குறித்த இரண்டு வீரர்கள் மாத்திரம் இதுவரை விபரங்கள் எவற்றையும் முன்வைக்கவில்லை.

இதன் காரணமாகவே, அடுத்த உலகக் கிண்ணப் போட்டி அணியில் இவர்கள் இணைத்துக்கொள்ளப்படமாட்டார்கள் என்று தெரியவந்துள்ளது.



# பொதுநலவாய போட்டி ஆவணங்கள் மாயம்







கடந்த வருடம் இந்தியா புதுடில்லி நகரில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற ஊழல், குளறுபடிகள் சம்பந்தமான ஆவணங்கள் காணாமல் போயிருந்தமை தொடர்பாக, விளையாட்டுத்துறை வட்டாரங்களில் பலத்த கண்டனங்களும், அதிருப்திகளும் வெளியிடப்பட்டுள்ளன. இது விடயமாக சி.பி.ஐ.விசாரணைகளும் நடைபெற்று வருகின்றன.

ஊழல்கள் குறித்தும் விசாரணைகளை நடத்துமாறு சி.பி.ஐ.க்கு இந்திய அரசாங்கம் உத்தரவிட்டிருந்தது. இதற்கமைய, சி.பி.ஐ. விசாரணையை முடக்கியிருந்த சந்தர்ப்பத்திலேயே அவை தொடர்பான ஆவணங்கள் மாயமாகியுள்ளன. இதனால், தற்போது குறித்த ஆவணங்களுக்கு என்ன நடந்தது என்ற விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு சி.பி.ஐ. ஆளாகியுள்ளது.

குறிப்பாக போட்டிகளை நடத்துவதற்கான நிதி மதிப்பீடு மற்றும் கட்டிட நிர்மாணப் பணிகளுக்கான ஒதுக்கீடுகள், செலவுகள் தொடர்பாக இந்த ஆவணங்களில் ஆதாரங்கள் இருந்தன. இவற்றை அடியொட்டி முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டுவிடும் என்பதற்காகவே, அவை திட்டமிட்டுப் பதுக்கப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. இது விடயமாக, போட்டி ஏற்பாட்டாளரும் அவரது உதவியாளரும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவைப் பற்றிய விசித்திரத் தகவல்கள்



சந்திரனில் வேற்றுக்கிரக வாசிகளோ, அவர்களின் புராதன நாகரிகத்தின் எச்சங்களோ இருந்திருந்தால் 'அப்பலோ' விண்வெளிப் பயணத்தின்போது, சந்திரனின் மேற்பரப்பில் காலடி வைத்த விண்வெளி வீரர்கள் அதனைப் பார்க்கவில்லையா? அல்லது அவர்கள் அதனைப் பார்த்தும் மௌனம் காத்தனரா? அல்லது நாஸா நிறுவனத்தின் மூலம் அவர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதா? என பல்வேறு கேள்விகள் ஆய்வாளர்களால் எழுப்பப்பட்டுள்ளன. இதேவேளை, அப்பலோ-14 சந்திர ஆய்வு முயற்சியின்போது, சந்திரனில் கால்பதித்த ஆறாவது விண்வெளி வீரர்தான் எட்கர் மிச்செல். இவரது கருத்தின்படி; வேற்றுக்கிரக ஜீவிகள் புவியை இலக்கு வைத்திருக்கும் நிலையில், புவி குறித்து மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக மறைந்து வாழும் ஓர் இடமாக அவை சந்திரனைப் பயன்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

## ஸ்கொட்லாந்திலும் பெரியது





சந்திரனில் அமைந்துள்ள பெரிய பள்ளம் அல்லது குழியை 'பேலீ' என அழைக்கின்றனர். அது ஏறக்குறைய 67,300 சதுர கிலோ மீற்றர் அகலத்தைக்கொண்டது. 'பேலீ' பள்ளத்தைப் புவிக்குக் கொண்டுவந்தால், புவியில் அமையப்பெற்றுள்ள ஸ்கொட்லாந்து நாட்டை முழுமையாக அந்தப் பள்ளத்திற்குள் இறக்கி விடலாம் எனக் கூறப்படுகின்றது. அந்தளவுக்கு 'பேலீ' விசாலமானதாம்!

## அமைதியானது; சலனமற்றது

சந்திரன் என்பது முற்றிலும் அமைதியானதோர் இடம்.அங்கு வளிமண்டலம் இல்லாத காரணத்தால் ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு ஒலிப்பரிமாற்றம் நிகழ்வதில்லை. அதாவது; ஒலியானது கடத்தப்படுவதில்லை. அதனால், சந்திரனுக்குச் சென்று எவ்வளவுதான் சத்தமிட்டாலும் அருகில் உள்ளவரால்கூட அதனைச் செவிமடுக்க முடியாது.



## சந்திரனில் இருந்து கொண்டு வரப்பட்டவை

அப்பலோ தொடர் பயணங்களின் விளைவாக சந்திரன் மீது காலடி வைத்த பல்வேறு விண்வெளி வீரர்கள் அங்கிருந்து சந்திரப்பாறைகள், மண் மாதிரிகளைப் புவிக்கு எடுத்து வந்துள்ளனர். அதன்படி, சந்திரனிலிருந்து மொத்தம் 382 கிலோகிராம் எடையுள்ள பொருட்கள் எடுத்து



வரப்பட்டுள்ளன. 'அப்பலோ' விண்வெளி ஆய்விற்காக செலவு செய்த பணத்தின் அடிப்படையில் இதனை நோக்கும்போது, இந்த சந்திரப்பாறைகள், மண் மற்றும் புழுதியின் ஓர் அவுண்ஸ் நிறையின் பெறுமதி 1,896,000 அமெரிக்க டொலர்களாகும்.

## நீரில்லா சமுத்திரம்

நிலவின் இருள் சூழ்ந்த பிரதேசம் 'சமுத்திரம்' என அழைக்கப்படுகின்றது. இப்பகுதி சமுத்திரம் எனக் கூறப்பட்ட போதும், அங்கு நீர்வளம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பல மில்லியன் வருடங்களுக்கு முன்னர் அங்கு எரிமலைக்குழம்புகள் வழிந்து சென்றதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.


## நீரின் கூறுகள் இருந்தபோதும் உலர் தன்மையே நிலவுகின்றது

சந்திரனில் நீர் ஆதாரங்கள் இருப்பது தற்போதளவில் உறுதி செய்யப்பட்டுள்ள போதும், அந்தநீர் பயன்படுத்தக் கூடிய நிலையில்



இல்லை என்பதே உண்மையாகும். சூரியஒளியின் அதிக வெப்பம் காரணமாக, அவை நீராவியாகிவிடும் இயல்புடனேயே காணப் படுகின்றன. அத்துடன், சந்திரனின் மண் மிகவும் உலர்ந்த தன்மைகொண்டதால், பயிர்ச் செய்கை களை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் அங்கு மிகவும் குறைவு என்றே கூறப்படுகின்றது.

## சந்திரக்கலைகள்



அமாவாசையிலிருந்து பூரண சந்திரன் வரை சந்திரன் எமக்குக் காட்சியளிக்கும் தோற்றம் நாளுக்கு நாள் வித்தியாசப்படுகின்றது. சந்திரனின் இந்த மாற்றத்தை 'சந்திரக்கலைகள்' என அழைக்கின்றனர். சந்திரன் புவியைச் சுற்றி $29\frac{1}{2}$ நாட்களுக்குப் பயணிப்பதாலேயே இந்த மாற்றங்கள் நிகழ்கின்றன.

## சந்திரனில் நிலநடுக்கம்



புவியில் போலவே நிலவிலும் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன.எனினும், இவை புவியில் ஏற்படும் நிலநடுக்கம் அளவுக்கு கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. ஆண்டுதோறும் 3000 வரையான நிலநடுக்க நிகழ்வுகள் சந்திரனில் ஏற்படுகின்றன. இத்தகைய நில நடுக்கத்தின்போது வெளியாகும் சக்தியானது பட்டாசு கொளுத்தும்போது வெளிப்படும் அலங்காரக் காட்சிகளுக்கு ஒப்பானதாகும்.

## என்றும் மாறுவதில்லை

எக்காரணம் கொண்டும் சந்திரனில் நிலம் மாற்றமடைவதில்லை. இதனால், மேற்பரப்பில் எந்தவித பாதிப்புகளும் ஏற்படுவதில்லை.

## 10 மில்லியன் வருடங்கள் கழிந்தாலும் அழியாதிருக்கும்

அமெரிக்காவின் 'நாஸா' நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட சந்திரன் குறித்த 'அப்பலோ' ஆய்வு நடவடிக்கைகளின்போது, சந்திரனில் காலடி வைத்த அப்பலோ விண்வெளி வீரர்கள் சந்திரனில் சிலவற்றை விட்டு வந்தனர். அவற்றில் அவர்களின் பாதத் தடங்களும் அடங்கும். இந்தப் பாதத் தடங்கள் இன்னும் 10 மில்லியன் வருடங்கள் கழிந்தாலும் அழிவடையாமல் பாதுகாப்பாக இருக்குமென விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைக்க — 1

Rocket

Firecracker

Flag

Popsicle

Hat

Watermellon



## பொருத்தமற்ற உருவில் X அடையாளமிடுக — 2



## சரியான விடையில் கோடிடுக — 4

1. 'டயர்' ஐக் கண்டுபிடித்தவர்;
   1) சார்ள்ஸ் குட் இயர்
   2) அலெக்சாண்டர் பார்க்ஸ்
2. உலகிலேயே மிகச் சிறிய பறவை;
   1) தேன்சிட்டு
   2) சிட்டுக்குருவி
3. முதன்முதலில் கடதாசியைத் தயாரித்தவர்கள்;
   1) பெபிலோனியர்கள்
   2) சீனர்கள்
4. நிலத்தில் வாழும் விலங்குகளில் மிகப் பெரியது;
   1) திமிங்கிலம்
   2) யானை
5. 'அல்லிகளின் நாடு' எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் நாடு;
   1) பிரான்ஸ்
   2) திபெத்




தயாரிப்பு - நுஃப்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2011.01.19ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 295**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## பிழைகளைத் திருத்தி எழுதுக — 5

1. துப்பரவு - ..............................
2. பட்றறை - ..............................
3. வலாகம் - ..............................
4. களைநிகழ்சி - ..............................
5. அலுவளாகம் - ..............................

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 292 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
அஸ்மா உபைத்,
235, மத்திய வீதி, திருகோணமலை.

**போட்டி: 02**
பா.சஜீலா,
525/A, ஆஸ்பத்திரி வீதி, சாய்ந்தமருது-07.

**போட்டி: 03**
எம்.விஜித்குமார்,
32, உடபாகை தோட்டம்,
மத்திய பிரிவு, தெரணியகலை.

**போட்டி: 04**
விக்னேஷ்வரன்,
65 1/1, வைத்யா வீதி, தெஹிவளை.

**போட்டி: 05**
பி.அஷாந்த்,
109, நுவரெலியா வீதி, இறம்பொடை.

**பாராட்டுப் பெறுவோர்:**

* எஃப்.முபீகா, பிலிமதலாவை.
* ர.ஜனுஷாந், ஏறாவூர்-05.
* அன்சத் அஹமட், புதிய காத்தான்குடி - 02.
* கு.நேசல்யா, யாழ்ப்பாணம்.
* ஆர்.பஸ்னா, சில்மியாபுர.
* ச.கஜந்தன், காரைதீவு - 05.
* எஸ்.மொஹமட், குருநாகல்.
* கே.ராம்கோபாலன், வத்தளை.
* எம்.ரிகாஸ், நாவலப்பிட்டி.
* வி.ஸாஜித், கல்முனை.

## அறிவுக்கு விருந்து 292 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 02**



**போட்டி: 03**
1. 65, 60, 55, 50, 45, 40
2. IX, X, XI, XII, XIII, XIV
3. 73, 34, 42, 28, 85, 56
4. V, X, XV, XX, XXV, XXX

**போட்டி: 05**
1. ஓர் ஒலிக்கு வழங்கப்படுகின்ற வரிவடிவம்
2. ஃ 3. 247
4. பற்பொடி

## எத்தனை உள்ளன? — 3




## விஜய் வாசகர் மடல்



2005 ஆம் ஆண்டில் இருந்து நான் 'விஜய்' வாங்கி வருகிறேன். உன்னால் மாணவர்களாகிய எமக்கு 90% வரையான அறிவு ஊட்டப்படுகின்றது. இதுவரை உன்னில் எந்தவொரு குறையையும் நான் காணவில்லை.

**எம்.ஹாஷிர், பிட்டுனுகம.**

பெற்றோர் என்ற ரீதியில் இக்கருத்தை அறியத்தருகின்றேன்.ஒவ்வொரு நாளும் நாம் வேலைக்குச் சென்று திரும்பி வரும் போதும் எமது பிள்ளைகள் ''உண்பதற்கு என்ன வாங்கி வந்தீர்கள்?'' என்றே முதலில் கேட்பார்கள். ஆனால், புதன்கிழமைகளில் நாம் வீட்டுக்கு வரும்போது மட்டும் ''விஜய் வாங்கி வந்தீர்களா?'' என்றுதான் கேட்பார்கள். குறைந்த செலவில் அறிவைப் பெற வழிவகுப்பதற்கு எமது நன்றிகள்.

**வி.புகனேஸ்வரி, டிக்கிரிய, களுதாவளை.**

'ஒல்லாந்தர்' எனும் தலைப்பின்கீழ் வரும் வரலாற்றுத் தொடரை ஆரம்பத்திலிருந்து வாசித்து வருகின்றேன். 'கடலின் அரவணைப்பில் மீன்பிடித் தொழில்' எனும் ஆக்கம் எனக்கு அதிக பயனைத் தந்துள்ளது. 'வேப்பமரத்தடிப் பேய்' எனும் கதைத் தொடர் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. உனக்கு எனது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

**ச.சிவகாந்தன், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாண**

விண்வெளியை நினைத்தால் உன் ஞாபகம்தான் வருகிறது. காரணம், வேறெந்தப் பத்திரிகைகளிலும் வெளிவராத அளவிற்கு புத்தம் புதிய தகவல்களை நீ தருகின்றாய்.

**எம்.வஸீம்,**
**குருகொட, அக்குறனை.**




'மனித தேவைகளுக்காக உயிர் இழக்கும் திமிங்கிலங்கள்' என்ற ஆக்கம் சிந்திக்கத் தூண்டுகிறது. 'கடலின் அரவணைப்பில் மீன்பிடித் தொழில்' எனும் ஆக்கத்தின் மூலம் இலங்கையில் அமைந்துள்ள மீன்பிடித் துறை முகங்கள் மற்றும் மீன்பிடித் தொழிலுக்காகப் பயன்படுத்தப் படும் பொருட்கள் பற்றி அறியக் கூடியதாக இருந்தது. அத்துடன், விமானம் பற்றிய வித்தியாசமான தகவல்களையும் உன்னால் அறிந்து கொண்டேன்.

**சூ.சேயோன், பண்ணாகம் தெற்கு, சுழிபுர**

'உலகின் ஆரம்பகால விமான சேவைகள்' என்ற கட்டுரையின் மூலம் நான் பல புதிய தொழில்நுட்பங்களை அறிந்துகொண்டேன். 'வாரம் ஒரு நாடு' எனும் பகுதியில் சிம்பாப்வே நாடு பற்றிப் பூரண அறிவைப் பெற்றேன். அத்துடன், 'மாணவர் ஆக்கங்கள் பகுதி மிகவும் அருமையானது. 'உலகின் சூப்பர் கணினி' எனும் ஆக்கம் நான் தெரிவு செய்த பாடத்திற்கு மிகவும் கைகொடுத்துள்ளது.

**சி.காயத்திரி, அச்சுவேலி புனித தெரேசாள் ம.கல்., யாழ்ப்பாணம்.**

'உலகின் ஆரம்பகால விமான சேவைகள்', 'வினைத்திறனை வீட்டிலிருந்தே ஆரம்பிப்போம்', 'ஒல்லாந்தர்' ,'இராமாயணம்', 'வேப்பமரத்தடிப் பேய்' போன்ற அனைத்தும் சிறந்தவை. மேலும் பயன் தரும் ஆக்கங்களைத் தருவதற்கு விஜய்க்கு வாழ்த்துக்கள்.

**எஸ்.அகீலா, தரம்-10, மதவாக்குளம் மு.ம.வித்., மதவாக்குளம்.**

'உலகின் ஆரம்பகால விமான சேவைகள்', 'வாரம் ஒரு நாடு', 'விண்வெளித் தகவல்கள்', 'வினைத்திறனை வீட்டிலிருந்தே ஆரம்பிப்போம்', 'மீன்பிடித் தொழில்', 'முதலாவது வாழ்த்து மடல்' போன்ற ஆக்கங்கள் பல்வேறு தகவல்களைத் தாங்கி வந்திருந்தன. மேலும் பல விடயங்களை உன்னில் எதிர்பார்த்திருக்கின்றேன்.

**சல்மான் லாபீர், பொத்துவில் மத்.கல்., பொத்துவில்.**

இந்த இதழில் (12.01.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 19.01.2011.

**அனுப்ப வேண்டிய முகவரி:**



**வாசகர் மடல்,**
**'விஜய்'**
**த.பெ.எண் 2037,**
**கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஹைஹீல்ஸ்' பாதணியின் ஆரம்பகாலம்



கெதரின் டி மெடிசி









1400 ஆம் ஆண்டுகளில் துருக்கியில் சொப்பைன் (Chopine) என்னும் குதி உயர்ந்த பாதணிகள் உருவாக்கப்பட்டன. இவை 1600 ஆம் ஆண்டு வரை ஐரோப்பிய நாடுகளில் பிரபல்யமடைந்திருந்தன.

குதி உயர்ந்த (Higheels) பாதணிகள் நவீன காலத்துக்குரியவை என்றே பலரும் கருதுகின்றனர். ஆனால், இந்தக் குதி உயர்ந்த பாதணிகள் புராதனகாலம் முதல் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்காலத்தில் இதனைப் பெரும்பாலும் பெண்களே அணிவதால் இது பெண்களுக்கே உரிய காலணியென நினைக்கின்றனர். ஆனால், இதனை ஆரம்பகாலத்தில் ஆண்களும், பெண்களும் அணிந்து வந்துள்ளனர். பல நூற்றாண்டு காலமாக உலகின் பல பகுதிகளிலும் வாழும் மக்கள் பல்வேறு வகையிலான குதி உயர்ந்த பாதணிகளை உபயோகித்துள்ளனர்.

புராதனகாலத்து எகிப்திய சுவரோவியங்கள், கல்லறைகள், ஆலயங்களில் ஆண்களும், பெண்களும் குதி உயர்ந்த பாதணிகளை அணிந்தவகையிலான ஓவியங்கள் காணப்படுவதோடு, அக்காலகட்டத்திற்கு முன்பிருந்தே, இத்தகைய பாதணிகளை மக்கள் உபயோகித்துள்ளமை தெரிய வருகின்றது. இதேவேளை, பல்வேறு காரணங்களுக்காக இந்தப் பாதணிகள் உபயோகிக்கப்பட்டுள்ளமையும் தெரிய வருகிறது.

1553 ஆம் ஆண்டு இத்தாலிய இளவரசி கெதரின் டி மெடிசிக்கும் பிரான்ஸ் அரசர் ஹென்றிக்கும் நடைபெற்ற திருமணத்தின்போது, விசேடமாகத் தயாரிக்கப்பட்ட குதி உயர்ந்த பாதணியை மணப்பெண்ணான கெதரின் அணிந்திருந்தார். இதனையடுத்து இத்தாலியில் குதி உயர்ந்த பாதணிகள் பெண்களின் பொதுவான பாதணியாக மாறியது.

அதன் பின்னர் இன்னொரு பேரரசியான மேரி டியூடர் தனது குள்ளமான தோற்றம் வெளிப்படாமல் இருப்பதற்காக, இயன்றளவு குதி உயர்ந்த பாதணிகளை உபயோகித்தார். எனினும் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக் காலம்வரை ஆண்களும் பெண்களும் குதி உயர்ந்த பாதணிகளை உபயோகித்துள்ளனர்.

1660 ஆம் ஆண்டளவில் பாதணித் தயாரிப்பாளரான நிக்கலஸ் பெஸ்டேஜ் என்பவர் விதம் விதமான குதி உயர்ந்த பாதணிகளைத் தயாரிக்கலானார். இதனையடுத்து குதி உயர்ந்த பாதணிகள் பெண்களின் நவநாகரிக பாதணியாக வலம் வரலாயிற்று.

அத்துடன், மொங்கோலிய குதிரை வீரர்களும் ஆரம்பகாலத்தில் இவ்வகையான குதி உயர்ந்த பாதணிகளை உபயோகித்துள்ளனர். இவர்கள் இதனைப் பாவித்தமைக்கு முக்கிய காரணம் என்னவெனில், குதிரையின் சேணத்திலிருந்து தொங்கும் பாதம் தாங்கி வளையத்தில் (Stirrup) இருந்து பாதம் வழுக்குவதைத் தடுப்பதற்காகும்.

இத்துடன்,எகிப்திய கசாப்புக் கடைக்காரர்கள் கழிவுப் பொருட்களில் கால் வைப்பதைத் தவிர்க்கும் வகையில் குதி உயர்ந்த பாதணிகளை உபயோகித்தனர். காலப்போக்கில் ஆஜானுபாகுவான தோற்றமாகத் தம்மைக் காட்டுவதற்கு உயர்குடி மக்கள் குதி உயர்ந்த பாதணிகளை உபயோகித்துள்ளனர்.

# சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெறும் தெஹிவளை 'பேபி' ஓரங்குட்டான்







தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் கடந்த நவம்பர் 3 ஆம் திகதி பிறந்த ஓரங்குட்டான் குட்டியின் பிறப்பானது உலகின் கவனத்தை ஈர்த்திருப்பதால் அது சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெறுவதாகவும் உள்ளது. இந்தக் குட்டி ஓரங்குட்டான் அதன் தாயுடன் மிகவும் ஒட்டி உறவாடிக் கொண்டிருந்தபோதிலும் அதன் தந்தைக்கு இன்னும் அறிமுகப்படுத்தப்படவில்லையாம். அதுபற்றி தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை மிருக வைத்தியர் டொக்டர் ஜகத் ஜயசேகர கூறிய விடயம் வருமாறு;

விலங்குகளில் ஓர் இயல்புண்டு. அதாவது, எதிர்காலத்தில் தனக்குப் போட்டியாக உருவாகக்கூடும் என்னும் அச்சத்தில் சில தந்தை விலங்குகள் தமக்குப் பிறக்கும் ஆண் வாரிசுகளை விரும்புவதில்லை. அந்த அச்சம் காரணமாக, அந்த தந்தை விலங்குகள் தமது ஆண் குட்டிகளைக் கொன்றுவிடுவதும் உண்டு. இதனால், காலப்போக்கில் தாய் விலங்கு தனது குட்டி ஆண் விலங்குடன் தப்பிச் சென்றுவிடுவதும் உண்டு.

இப்படியொரு நிலை இருப்பதால் ஓரங்குட்டான் இனத்திலும் குட்டிக்குத் தந்தை விலங்கினால் அச்சுறுத்தல் உண்டா? என்பது பற்றி ஆராய்ந்து வருவதாக டாக்டர் ஜயசேகர தெரிவித்தார். ஓரங்குட்டான் இனத்தில் தந்தை விலங்கினால் ஆண் குட்டிக்கு அச்சுறுத்தல் இல்லையென்று நிரூபிக்கப்பட்டால் இந்தக் குட்டி ஓரங்குட்டான் தந்தை ஓரங்குட்டானுக்கு அறிமுகம் செய்யப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் குட்டி ஓரங்குட்டானுக்கு என்ன பெயர் வைப்பது என்பது பற்றிப் பொது மக்களிடம் ஆலோசனை கேட்கப்பட்டது. இறுதியில் ஆறு வயதான திமுத் தரிந்த என்ற பிள்ளை தெரிவு செய்த பெயரே, இந்தக் குட்டி ஓரங்குட்டானுக்கு வைக்கப்பட்டது. அந்தப் பெயரானது பேபி சகிஃபோ (Baby Sakifo) என்பதாகும்.

இலங்கையில் பிறந்த முதலாவது சுமாத்ரா ஓரங்குட்டான் என்ற வகையிலும் 'சகிஃபோ' சரித்திர முக்கியத்துவம் பெறுகிறது.

இதற்கு 28 வருடங்களுக்கு முன்னர் போர்னிய ஓரங்குட்டான் ஒன்று பிறந்துள்ளது. ஓரங்குட்டான் இனங்கள் அருகிவரும் நிலையில் தற்பொழுது உலகம் முழுவதிலும் 6,000 த்துக்கும் குறைவான ஓரங்குட்டான்களே உள்ளன.

பேபி சகிஃபோவின் பெற்றோர் ஓரங்குட்டான்கள் 2003 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதி இந்தோனேஷியாவிலிருந்து கொண்டு வரப்பட்டவை. இவ்வினம் அருகிவரும் காரணத்தால் இந்தோனேஷியாவிலிருந்து வெளியில் அனுப்பப்பட்ட கடைசி ஜோடியும் இவையேயாகும்.

தற்பொழுது தந்தை ஓரங்குட்டானுக்கு 14 வயதும் தாய் ஓரங்குட்டானுக்கு 12 வயதும் ஆகின்றன.

# யோகாசனம் பயில்வோம் 8

## புஜங்காசனம்



'புஜங்கம்' என்பது பாம்பு என்பதாகும். பாம்பு படம் எடுப்பது போன்ற நிலையில் இருப்பதனால் இதற்குப் புஜங்காசனம் எனப் பெயர் வந்தது. அதைவிட, புயத்திற்கும் பலத்தைத் தருகிறது. கழுத்துப் பின் நோக்கி வளைக்கப்படுவதனால் மத்தியாசனம் போன்று மாற்றாசனத்திற்குரிய தன்மைகளும் இதற்குண்டு. வயிற்றின் சதைகள் இழுக்கப்படுவதால் அங்கு இரத்த ஓட்டம் ஏற்படும். விலா எலும்புகள் பலமடையும். 'ஆஸ்த்மா' நோய் உள்ளவர்களுக்கு சிறந்த ஓர் ஆசனம். சாதாரணமாக, மாணவர்கள் 3 தடவைகள் செய்யவும். நோயாளிகள் ஆசானின் ஆலோசனைப்படி அதிகமாகச் செய்யவும்.

கிரேண்ட் மாஸ்டர் வேலாயுதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஓப்பன் லீக்ஸ்' எனும் பெயரில் மற்றுமொரு இணைய சேவை அறிமுகம்....!

பெரும் பரபரப்பை ஏற்படுத்திய விக்கிலீக்ஸ் இணைய சேவைக்கு மாற்றீடாக, மற்றுமொரு புதிய சேவை அறிமுகமாகியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தப் புதிய இணைய சேவையின் பெயர் 'ஓப்பன் லீக்ஸ்' என்பதாகும்.

இதன் ஸ்தாபகர் பெயர் டேனியல் டொம்ஷெய்க். இவர் ஜேர்மனி நாட்டவராவார். முன்னைய விக்கிலீக்ஸ் இணைய சேவையை ஸ்தாபித்தவர்களில் இவரும் ஒருவர். ஜூலியன் எசேன்ஜ், டேனியல் டொம்ஷெபர்க் ஆகிய இருவரும் இணைந்தே 'விக்கிலீக்ஸ் இணையத்தை ஸ்தாபித்திருந்தனர். எனினும், 'விக்கிலீக்ஸ்' இணைய சேவையின் கொள்கைகள், போக்குகள் ஆகியவற்றில் அதிருப்தியடைந்திருந்த டேனியல் சில காலங்களுக்கு முன்னர் விக்கிலீக்ஸ் இணைய







சேவையிலிருந்து, பதவி விலகிச் சென்றிருந்தார்.

எனவே, தனது கொள்கைகளுக்கு ஏற்ப, ஒரு பொது நெறி தவறாத இணைய சேவையொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்ற ஆவலைக் கொண்டிருந்த டேனியல் தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 'ஓப்பன்லீக்ஸ்' என்ற இணைய சேவையை ஸ்தாபித்துள்ளார். இதன் முகவரி www. openleaks.org ஆகும்.

விக்கிலீக்ஸ் இணைய சேவையைப் போன்று தான்தோன்றித் தனமாக எந்தவொரு நெறிமுறையும் இல்லாமல் எடுத்த எடுப்பிலேயே ரகசியத் தகவல்களை வெளியிடும் கொள்கையைக் கொண்டதல்ல இந்த 'ஓப்பன்லீக்ஸ் சேவை.

எவ்வாறு இதன் தொழிற்பாடு அமைகின்றதென்றால், எந்தவொரு இணையத்தளத்திலும் இணைந்து கொள்ளக்கூடிய விசேட டூல் (Tool) ஒன்றை இது கொண்டிருக்கும். உதாரணத்திற்கு கூகுல் சேர்ச் பொக்ஸ் ஒன்றை இணையத்தளத்திற்கு சேர்த்துள்ளதைப் போன்றே ஓப்பன்லீக்ஸ் டூலையும் இணையத்தளத்திற்கு சேர்த்துக் கொள்ள முடியும்.

இந்த வெப்தளத்திற்குள் நுழைகின்ற எந்தவொருவரும் ஓப்பன்லீக்ஸ் அல்லது ட்ரொப்பொக்ஸுக்குள் இணைய முடியும்.

இதன் பின்னர் தம்வசம் உள்ள ரகசியத் தகவல்களை அதற்குள் சேர்க்க முடியும். ஆனால், ரகசியத் தகவல்களை வழங்குகின்ற உரியவரின் விபரங்கள், கணினிப் பதிவுகள் எவையும் இவற்றில் அடையாளப்படுத்தப்படாது. அந்தளவிற்கு இந்த 'ஓப்பன்லீக்ஸ்' இணைய சேவையை நம்பி எந்தவொருவ்ரும் ரகசியத் தகவல்களை அதற்கு அனுப்ப முடியும்.

இவ்வாறு ஒவ்வொரு இணைய சேவையிலிருந்தும் 'ஓப்பன்லீக்ஸ்' இணையத்திற்கு அனுப்பப்படுகின்ற தகவல்கள் அனைத்தும் அந்தக் கணத்திலேயே உலகிலுள்ள ஏனையவர்களும் பார்க்கக்கூடியவாறு அமையாது. ஏனென்றால், இந்தத் தகவல்கள் பகிரங்கப்படுத்தத்தக்கவையா? இல்லையா? என்பது குறித்து இச் சேவையின் விசேட அங்கத்துவம் மிக்க குழுவொன்றின் பரிசீலனைக்கு விடப்படும். இந்தக் குழுவில் உள்ளவர்கள் 'ஒன்லைன்' மூலம் வாத, விவாதங்களை நடத்தி இறுதித் தீர்மானத்தை எடுப்பர். அதற்கமையவே, மேற்குறிப்பிட்ட ரகசியத் தகவல்கள் பகிரங்கப்படுத்தப்படும்.

ஊடக நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக சேவையாளர்கள் ஆகியோருடன் முதன்முதலாக குறித்த ரகசியத் தகவல்கள் வழங்கப்படும். அவர்களே இவற்றின் முக்கியத்துவம் சாதக, பாதகம் ஆகியவற்றை ஆராய்ந்து தேவைப்பட்டவாறு சாதாரண பொது மக்களுக்கு அவற்றைப் பகிரங்கப்படுத்த முடியும்.

'விக்கிலீக்ஸ்' இணைய சேவையில் எந்தவொரு நெறிமுறையும் பாராமல் எடுத்த எடுப்பிலேயே எல்லாவற்றையும் பகிரங்கப்படுத்தியதாலேயே 'விக்கிலீக்ஸ்' இன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது.

'ஓப்பன் லீக்ஸ்' கடைப்பிடிக்கின்ற இந்த நெறிமுறை ஏற்கனவே 'விக்கிலீக்ஸ்' சேவைக்கென முன்னர் முன்மொழியப்பட்ட ஒன்றாகும். ஆனால், அன்று அது புறக்கணிக்கப்பட்டதால்தான் டேனியல் டொம்ஷெர்க் விக்கிலீக்ஸிலிருந்து வெளியேறினார்.







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, ஜனவரி மாதம் 12 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday January 12, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org